பொன்னி

PONNI 25·10·51



4 அணா

NA-5

பொன்னி

பொருளடக்கம்

மலர் 5 | அக்டோபர் 25, 1951 | இதழ் 16


திருவள்ளுவர் ஆண்டு 1982 ஐப்பசித் திங்கள் 8-ம் நாள்

மனிதனும் மிருகமும்

கண்ணியமாக நடந்துகொள்வதுதான் மனிதனை மிருகங்களினின்றும் உயர்வாகக் கருதச் செய்கிறது. மிருகம் தனக்காகவே தான் வாழ்கிறது. அதாவது முழுக்க முழுக்கச் சுயநலமே மிருக வாழ்க்கை. மனிதனுக்குத்தன்னலமே பெரிதெனப் பேணும் நிலையேற்பட்டுவிட்டால் பின் மனிதனுக்கும் மிருகத்திற்கும் என்னதான் வேறுபாடு காணமுடியும்? எனவே கண்ணியத்தைப் பற்றியே நாம் மிகவும் வலியுறுத்திக் கூறவேண்டியிருக்கிறது. ஏனெனில் அதுதான் மனிதனை மேலாகக் கருதச் செய்வதுடன முற்றிலும் வேறான அடிப்படையில் அவனை மிருகங்களினின்றும் பிரிக்கிறது. நமது ஒவ்வொரு சிந்தனையிலும் செயலிலும் நாம் கண்ணியமான மனிதர்களாக வாழ முயற்சிக்கவேண்டும்.

[சத்தியவதி நகர் காங்கிரஸ் கூட்டத்தில் பேசிய போது திரு. தேசாய் இவ்வாறு குறிப்பிட்டார்.]

அம்பேத்கார் மசோதா



பாகிஸ்தான் துயரம்

பாகிஸ்தான் முதலமைச்சர் லியாகத் அலிகான் சுட்டுக்கொல்லப்பட்டார் என்ற செய்தி உலகையே திடுக்கிடவைத்தது; திகைக்க வைத்தது!

இந்தியாவில் காந்தியாரைச் சுட்டுக்கொல்ல ஒரு கோட்ஸே தோன்றினான்; பாகிஸ்தானில் லியாகத் உயிரைக் குடிக்க ஒரு ஸையது அக்பர் தோன்றினான்! இந்த அநாகரிப் போக்கு எண்ணிப் பார்க்கும் யாரையுமே நடுங்க வைக்கும். ராவல்பிண்டியில் இருபதினாயிரம் பேர் அடங்கிய கூட்டம்; லியாகத் அக் கூட்டத்தில் பேச வந்திருக்கிறார். வரவேற்புரைகள் படித்தளிக்கப்பட்டன. லியாகத் பேச முன் வந்தார்; அவர் வாயைத் திறக்கவில்லை. அதற்குள்ளேயே அவரை நோக்கி ஒன்றன்பின் ஒன்றாக இரு குண்டுகள் பாய்ந்தன. லியாகத் தரையில் சாய்ந்தார்! கூட்டம் சையத் அக்பரை - லியாகத் உயிரைக் குடிக்கத் துப்பாக்கி ஏற்றிய பாதகனை-அக்கு அக்காகப் பிய்த்து எறிந்தது; கொன்றது! லியாகத் உயிரைக் காப்பாற்றும் முயற்சிகள் பயனளிக்கவில்லை. அவர் மாண்டார்! உலகம் இந்தச் சோகக் கதையைக் கேட்டு விம்மியது!

லியாகத், பாகிஸ்தான் உருவாவதற்கு முன்னின்றவர்களுள் முக்கியமானவர். ஜின்னாவை அடுத்து லியாகத் அலிகான் பாகிஸ்தான் மக்களின் பெருமதிப்பைப் பெற்று வந்தார். ஜின்னாவின் மறைவுக்குப் பின்னரும் பாகிஸ்தான் ஆடாமல் அசையாமல் நிர்வகிக்கப்பட்டதற்கு லியாகத் செயலாண்மையே காரணம். லியாகத்தின் அரசியல் கொள்கைகளில் நமக்குக் கருத்து வேற்றுமையிருக்கலாம். ஆனால் அவருடைய திறமையில், நாட்டுக் குழைக்கும் நேர்மையில் நாம் பழுது காண முடியாது. பாகிஸ்தான் தோன்றக் காரணமாயிருந்து, பாகிஸ்தான் தோற்றம் பெற்றது முதல் தன் உயிர் மறையும் வரை அதன் நலனுக்கே பாடு பட்ட வந்த அவர் தம் பண்பை நாம் மறக்க முடியாது.

எனவே இந்திய முதலமைச்சரும் மற்ற தலைவர்களும் பாகிஸ்தானுக்கு ஏற்பட்ட பெருந்துயரில் பங்குகொண்டு தங்கள் அனுதாப உரைகளை உளமார வெளியிட்டது பொருத்தமான செய்தியேயாகும். இந்த இணைப்பு வளர்ந்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே உள்ள தகராறுகள் தீர்க்கப்படுமானால் அது உலக அமைதிக்குப் பேருதவியாக அமையும். லியாகத் மறைவால் துயருறும் பாகிஸ்தான் மக்களும், தம் அண்டை நாட்டுத் துயரில் பங்கு கொள்ள முன்வந்திருக்கும் இந்திய மக்களும், தங்கள் தங்கள் தலைவர்களை இவ்வழியில் ஊக்குவார்களாக!

காலமும் கருத்தும்

பிரிட்டன் தேர்தல்

பிரிட்டனில் பொதுத்தேர்தல் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும். கன்சர்வேடிவ்கள் 'சர்ச்சில் சாம்ராஜ்யத்தை' நிறுவிவிடலாம் என்று கனவு கண்டுகொண்டிருக்கிறார்கள். தொழிற் கட்சியினரோ ஆட்டங்காணாத 'மெஜாரிட்டி' பெறுவதற்குத்துடித்துக்கொண்டிருக்கின்றனர். பிரிட்டிஷ் பொதுமக்கள் என்ன முடிவு செய்யப் போகிறார்களென்பது விரைவில் தெரிந்துவிடும். இந்நிலையில் பிரிட்டிஷ் சிங்கத்திற்கு மத்திய கிழக்குப் பகுதியில் அடிமேல் அடி கிடைத்து வருகிறது. ஈரான் எண்ணெய்ப் பிரச்னை பிரிட்டிஷ் நிபுணர்கள் வெளியேற்றத்தில் முடிந்துவிட்டது; ஐ.நா. பாதுகாப்புசபையில் பிரச்னையைப் பரிசீலனை செய்வதே 'இரண்டுங்கெட்டான்' நிலையில் நிற்கிறது. ஈரானுக்கு உலக ஆதரவு இருக்கிறது என்பது தெளிவு. ஈராக் நாடும் பிரிட்டனைத் தம் நாட்டு ஒப்பந்தத்தைத் திருத்துமாறு கோரியிருக்கிறது; தம் நாட்டுத் தனி உரிமைக்குப் பங்கமான விதிகளையெல்லாம் மாற்றவேண்டுமென்பது அதன் விருப்பம். எகிப்து 1936-ம் ஆண்டு ஆங்கிலோ—எகிப்து ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டது. சூயஸ் கால்வாய்ப் பகுதியை விட்டுப் பிரிட்டிஷ்படைகள் வெளியேறவேண்டும்; சூடானை விட்டுப் பிரிட்டிஷ் நிர்வாகம் அகலவேண்டும். எழுச்சிபெற்றுள்ள எகிப்தின் இந்தத் திட்டங்களை நிறைவேற்றிவிட எகிப்து ஆட்சியாளர் உறுதிகொண்டிருக்கின்றனர்; பிரிட்டிஷ்காரர்களோ சூயஸ்கால்வாயைவிட்டு எளிதில் வெளியேற எண்ணுவதாகத் தெரியவில்லை; தங்கள் படை பலத்தை அங்கே சேர்த்து வருகிறார்கள். சிறு சிறு கைகலப்புகளும் தகராறுகளும் நேர்ந்திருக்கின்றன. இந்நெருக்கடி எப்படி விடியுமென்பது பிரிட்டிஷ் தேர்தலுக்குப் பிறகுதான் தெரியும். பிரிட்டிஷ் மக்கள் காலப் போக்கை அனுசரித்து பழைய கோட்பாடுகளைக் கைவிட்டுவிடவேண்டும். பழைய ஆதிக்க எண்ணத்தை மறந்து செயலாற்ற முற்பட்டால்தான், பிரிட்டன் இந்த நெருக்கடிகளிலிருந்து தப்ப முடியும்!

டில்லி காங்கிரஸ்

டில்லியில் காங்கிரஸ் மகாசபை பிரமாதமாகக் கூடிப் பிரமாதமாகக் கலைந்திருக்கிறது. நேருவின் தலைமையைப் 'பரிபூரணமாக' ஒப்புக்கொள்ளும் முறையில் தீர்மானங்களெல்லாம் ஒருமித்த கருத்துடன் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. காங்கிரஸ் பத்திரிகைகள் இந்தக் காங்கிரஸ் மகாசபைக் கூட்-

டத்தைப் பற்றிப் பத்தி பத்தியாக வர்ணித்திருக்கின்றன. நேரு செய்த தலைமையுரை பத்திரிகைகளின் பல பக்கங்களை அடைக்கும்படியாக விளம்பரம் செய்யப்பட்டது. ஆனால் இக்காங்கிரஸ் நேரு எதிர்பார்க்கும் எந்தவித மாறுதலையும் ஏற்படுத்த உதவாது என்பது நம் எண்ணம். காங்கிரஸ்காரர்கள் தொண்டு மனப்பான்மை கொள்ளவேண்டுமென்பதும் காந்தீயத் திட்டத்தை அமுல் நடத்தவேண்டுமென்பதும் அவர் விருப்பம். காங்கிரஸ் சார்பில் தேர்தலில் நிற்பவர்கள் நேர்மையானவர்களாக விளங்க வேண்டுமென்பது அவருடைய பேராவல். இந்த ஆவல், விருப்பத்தை எல்லாம் காங்கிரஸ்காரர்கள் சொல்லளவில் ஆமோதிக்கத் தயாராயிருக்கிறார்கள். ஆனால் 'காரியத்தில் தங்கள் போக்கை' மாற்றிக்கொள்ள அவர்கள் தயாராக இல்லை. காங்கிரஸ் அபேட்சகர்கள் ஜாபிதாவைப் பார்த்தால் பொது மக்களுக்கு இந்த உண்மை பரிபூரணமாக விளங்கிவிடும். அத்தோடு டில்லியில் கூட்டப்பட்ட காங்கிரஸ், தேர்தல் பிரசாரத்தின் ஒரு பகுதியே என்பதும் தெரிந்துவிடும்.

மணிலால் அறப்போர்

தென்னாப்பிரிக்காவில் உத்தமர் காந்தியாரின் புதல்வர் மணிலால் காந்தி, தம் தந்தையாரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நிறவெறியை எதிர்த்து அறப்போராட்டம் தொடங்கியிருக்கிறார். வெள்ளையருக்கென நூல் நிலையத்தில் தனி இடம்; ஹோட்டலில் தனி இடம்; பஸ்ஸில் தனி இடம்—இப்படி ஒவ்வொரு துறையிலும், வெள்ளையருக்கும் மற்றவருக்கும் வேறுபாடு காட்டும் நிறவெறி தென்னாப்பிரிக்காவில் தாண்டவமாடுகிறது. நாகரிக உலகம் அந்தப் போக்கை ஒரு வினாடிகூட அனுமதிக்காது. ஆனால் உலகின் நாகரிக மக்களெனக் கருதப்படும் பிரிட்டிஷ் மக்கள் ஆதரவில்தான் இந்த 'வெள்ளைநிற ஆதிக்கம்' நடைபெறுகிறது. ஐ. நா. சபை இந்தக் கோலத்தை எதிர்த்து ஒன்றும் செயலாற்றமுடியவில்லை; உலகின் பாதுகாவலர்கள் என்று தங்களை எண்ணிக்கொண்டிருக்கிற அமெரிக்கர்கள் இப்பிரச்னையில் வாய் மூடி மௌனிகளாயிருக்கின்றனர். இந் நிலையில் தென்னாப்பிரிக்க ஆட்சி 'காட்டு ராஜா' போக்கில் தம் கொள்கைகளை அமுல்நடத்தி வருகிறது. அந்தப் போக்கை எதிர்த்துத் தான் மணிலால் காந்தி சட்ட மறுப்புத் தொடங்கியிருக்கிறார். வெள்ளையருக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் இவர் போய் அமருகிறார். அரசாங்கம் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்தப் போராட்டம் பெரிதாகி, உலகக் கவனத்தை ஈர்க்க இந்திய முதலமைச்சர் நேரு முயற்சி அவசியம். நேருவின் ஆதரவு மணிலால் தொடங்கியுள்ள அறப்போரை வலுவுள்ளதாக்கப் பெரிதும் உதவும்; வெற்றிக்கும் வழி சேர்க்கும் என்பது நம் எண்ணம்.

புதுக் கட்சிகள்

தேர்தல் நெருங்க நெருங்கப் புதுப் புதுக் கட்சிகள் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. கற்பனைக்கெட்டாத அளவில் கட்சிகளின் எண்ணிக்கை பெருகலாமென்றுகூட ஐயமேற்படுகிறது. வாக்காளர்களிடத்தில் குழப்பம் ஏற்படுவதுதான் பல கட்சிகள் போட்டி யிடுவதன் பலனாக இருக்கமுடியும். உதாரணமாக நிலத்தைத் தேசியமயமாக்குவது என்ற கொள்கையை நான்கு கட்சிகள் கூறுகின்றன என்று வைத்துக்கொள்வோம். இந்தக் கொள்கைக்கு ஆதரவு தர எண்ணும் வாக்காளர்கள் நால்வரில் யாருக்குத் தங்கள் வாக்கை வழங்கமுடியும்? இவ்வாறு எல்லாக் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளும் ஒரேமாதிரியில் தான் சீர்திருத்தங்களை ஒலிபரப்புகின்றன. இதற்கிடையில் தக்க கட்சியைத் தேர்ந்தெடுப்பதோ தக்க அபேட்சகரைத் தேர்ந்தெடுப்பதோ எளிதில் முடிவதல்ல. இந்த நிலை மாறவேண்டும். 'ஆளுக்கொரு கட்சி' என்று தலைவர்கள் எண்ணுவதால்தான் இத்தனை புதுக் கட்சிகள் தோன்றுகின்றன! புதுக் கட்சிகளை உண்டாக்கும் தலைவர்கள் இந்தக் குழப்ப நிலையைத் தவிர்க்க முன்வருவார்களென எண்ணுகிறோம்.

அம்பேத்கார் ராஜினமா

அம்பேத்கார் ராஜினமா அறிக்கை நமக்கு வியப்பளிக்கவில்லை; அவர் எப்படி இத்தனை ஆண்டுகள் நேரு மந்திரி சபையில் இருந்தார் என்பதுதான் நமக்கு வியப்பான செய்தியாக இருக்கிறது! இந்து சட்ட மசோதாவின் சோக வரலாற்றை அம்பேத்காரின் அறிக்கை அம்பலத்துக்குக் கொண்டுவந்திருக்கிறது. நேருவின் மனத்திடமில்லாப் போக்கே இந்து சட்ட மசோதா கைவிடப்பட்டதற்குக் காரணமென்பதை அந்த அறிக்கை நன்கு புலப்படுத்துகிறது. அதைத் தவிர்த்து அம்பேத்கார் ராஜினமா சமயத்தில் டில்லி பார்லிமெண்ட் உதவி சபாநாயகர் நடந்துகொண்ட முறை மிக அருவருக்கத்தக்கது. ஒரு அமைச்சர் விலகிக்கொள்ளும்போது அறிக்கை தருவது எங்கும் நடப்பது; அந்த உரிமையில் உதவி சபாநாயகர் குறுக்கிட்டு அம்பேத்கார் சபையினின்றும் வெளியேறும்படியான சூழ்நிலையை உண்டாக்கியது மிக வருந்தத்தக்க செய்தியாகும்! அம்பேத்காருக்கும் அவருடைய இந்து சட்ட மசோதாவுக்கும் டில்லி வட்டாரம் காட்டிவந்த மாற்றாந்தாய் ஆதரவைப் பார்க்கும்போது, அம்பேத்காரின் ராஜினமா 'நாடகமாக' முடிந்ததில் ஆச்சரியம் எதுவுமில்லை. டில்லி ஆட்சியை மக்கள்புரிந்துகொள்ள அம்பேத்கார் ராஜினமா ஓரளவு உதவுமென நம்புகிறோம்.

கொலைகாரன்

பா. முத்து

குளிர்வீசும் அதிகாலை; நானெழுந்தேன்; வீட்டுக்
குறட்டினிலே நின்றிருந்தேன்; திரள்திரளாய்ச் செல்லும்
தளிர்மேனித் தோகையர்கள் பேசுகின்றார்; "மாலை
தண்ணீரை மொள்ளுதற்குச் சென்றுளாம் தங்கம்,
வெளியினிலே யாருமில்லை; என்செய்வாள் பாவம்!
வீழ்ந்திறந்தாள் கால்தவறிக் கேணியிலே! அந்தோ!
மிளிர்தங்கச் சிலைபோலக் கிடக்கின்றாள்" என்றார்.
மெய்ம்மறந்தேன்! மதிகுழம்பி, நெடுமரமாய் நின்றேன்!

* * *

தனியறையில் மாடியிலே தண்டமிழ்த்தேன் உண்டேன்;
தங்கத்துச் சிலையன்னாள் அறைப்பக்கம் வந்தே
இனிமையுறு மென்குரலில் என்தங்கை பெயரை
இட்டழைத்தாள்; எனைக்கண்டாள்; உடன்திரும்பிச் சென்றாள்
கனிமொழியாள் குரல்கேட்க விரைந்தோடிப் பார்த்தேன்;
கால்தவறிப் படியினிலே வீழ்ந்துவிட்டாள்; வாரி
'நனிஅடியா?' எனக்கூறித் தூக்கிவிட்டேன்; அன்னாள்
நாணத்தால் நலிவடக்கி ஓடோடிப் போனாள்!

சன்னலிலே நின்றிருந்தாள்; எனைக்கண்டாள் பின்பு
சட்டென்று நான்மறைய உளம்நைந்தாள்; மீண்டும்
பின்னலிலே வைத்திருக்கும் மலர்க்கொத்தைக் காட்டிப்
பெருமைபல கூறிநின்றாள் விழிகளினால்; நல்ல
கன்னலினைப் பிழிந்தெடுத்த தீஞ்சொல்லால் பேசிக்
கருத்தினிக்கச் செய்திட்டாள்; எனைக்கவர்ந்தாள்; அந்த
மின்னலினைக் காணக்கால் உளமெல்லாம் நோவும்;
மெல்லியலாள் என்னகத்தே இடமமைத்துக் கொண்டாள்;

நள்ளிரவில் தோட்டத்தே பிறாறியா வண்ணம்
நற்காதற் பழமுண்டோம்; இருட்டறையாம் உலகில்
கள்ளரென வாழ்ந்திருந்தோம்; கருவுற்ருள் பேதை!
கண்களிலே நீர்ததும்ப மூவிரலைக் காட்டி,
"எள்ளுமிந்த ஊர்! இதற்கு என்செய்வேன்?" என்ருள்
"எனக்கொன்றும் தெரியாது" எனக்கூறி நின்றேன்;
"வெள்ளத்துச் சுழல்தனிலே எனேச்சிக்க வைத்தே,
விழிக்கின்ருய்!" எனக்கூறிப் பெருமூச்சு விட்டாள்.

கால்தவறிக் கேணியிலே வீழ்ந்திறந்தாள் என்றே
காண்பவர்கள் கூறுகின்ருர்; மெய்யுணரா வீணர்;
வேல்தவறி வில்லினின்று தானுகப் போமோ?
வேல்விழியாள் மாய்ந்துவிட்ட தென்தவறே ஆகும்!
கோல்தவறும் மன்னனைப்போல் சாதிமதம் யாவும்
குறுக்கிட்டு மனம்மாற்ற அவளைக்கை விட்டேன்!
பால்தவிர்த்துக் கள்ளுண்ட பழிகாரன்; அந்தப்
பனிமொழியின் உயிருண்ட கொலைகாரன் நானே!



வளரும் இலக்கியம்

மேலைநாட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் நாடகப் பணியில் நம் நாடு இன்னும் எவ்வளவோ முன்னேற வேண்டியிருக்கிறது. இலக்கியச் சந்தையில் 'அத்தி பூத்தாற்போல' என்ற முன்னறிவிப்புடன் இடம்பெறும் விரல்விட்டு எண்ணக்கூடிய சில நல்ல நாடகங்களுள், அலமேலு நிலையத்தாரின் இந்தப் 'போராட்டம்' ஒன்று.

தொழிலாளத் தோழர்கள் வாழ வழிவகுக்கும் வகையில் அமைந்துள்ளது செல்வி அருண்மொழியாரின் கதை. இன்றைய வாழ்வின் அன்றாடச் சிக்கல்களை உள்ளடக்கி யிருப்பதால் கதையின் தரம் உயருகிறது; சாதாரணக் கதையை நிலைக்களனாகக் கொண்டு உலகில், உலகின் திரைமறைவில் நடக்கும் பல மூடு மந்திர நாடகங்களை அரங்கிலே அம்பலப்படுத்தும் இந்நாடகத்திலே சமூகம் உயிர்பெற்றெழ ஆங்காங்கே உயிரோட்டமுள்ள சிந்தனைக் கருத்துக்கள் பல தெளிக்கப்பட்டு இருக்கின்றன. நடிப்பதற்கும், படிப்பதற்கும் ஏற்றதொரு அழகிய வெளியீடு "போராட்டம்!"

மேவிழா மேதினி எங்கும் கொண்டாடப்படும் தொழிலாளர்தம் திருவிழா. திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டாடிய அவ்விழாவிலே பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்களின் சீரிய தலைமையில், அறிஞர் அண்ணாத்துரை அவர்கள் முழக்கிய தேனூறும் சொற்பொழிவினைக் கொண்டது 'அறிஞர் அண்ணாவின் மேவிழா முழக்கம்' என்ற இந்நூல்.

மேவிழாவை முன்வைத்து, அதனிடையே தொழிலாளர்கள் முன்னேற வழி, அவர்களின் விமோசனம்-அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய விரதம்—இப்படிப் பலதரப்பட்ட அழகான கருத்துக்களை வாரியிறைத்திருக்கின்றார் அண்ணா. அவர்தம் சிந்தனைக் கருத்துக்களைக் கேட்டால் மட்டும் போதாது; அவற்றை ஒன்று திரட்டிச் சேம நிதியாகத் தமிழர் இல்லங்களிலே சேகரித்து வைத்துக்கொள்வது இன்றியமையாதது என்ற நோக்கத்துடன் புத்தக உருவில் கொணர்ந்திருக்கும் அலமேலு நிலையத்தாரைப் பாராட்டத்தான் வேண்டும்.

போராட்டம்: ஆசிரியர் செல்வி அருண்மொழி பி. ஓ. எல்.

அறிஞர் அண்ணாவின் மேவிழா முழக்கம்: வெளியிட்டோர்: அலமேலு நிலையம், சென்னை—5.

விலை முறையே ரூ. 0–8–0 0–6–0.

●

அன்றாடம் நிகழும் சம்பவங்களைக் கதையின் 'கரு'வாக அமைத்துச் சுவைபடப் படைக்கும் விதத்தில்தான் ஆசிரியரின் திறமையை, திறமை பிரதிபலித்துக் காட்டும் வெற்றியை எடைபோடக்கூடும்.

'குலவிளக்கு' சாதாரணமான தொரு நீண்ட கதை. என்றாலும் அதை அழகுறப் பின்னியுள்ள போக்கு ஆசிரியருக்கு வெற்றி முத்திரையிடுகிறது. கதையைப் படித்ததும், கதைக்குரிய நபர்களான தேவகி—சந்திரன்-மோகனு ஆகியோர் ஒவ்வொருவரையும் பற்றிச் சிந்திக்க வைக்கிறது. இந்தப் 'பண்பு' ஒன்று போதும் தோழர் இளமைப்பித்தனின் திறமைக்கு! அவர் தமிழ் நடையில் என்றும் காண்பது போன்ற உயிரோட்டம் இருக்கிறது; ஆங்காங்கு சிந்தனையில் தேக்கி வைப்பதற்குரிய நல்ல கருத்துக்களும் சிதறிக் கிடக்கின்றன.

'சுமங்கலி'யைப்போலக் 'குலவிளக்'கின் கதையம்சத்திலும் ஆசிரியர் கவனம் சற்றே ஆழப் பதிந்திருப்பின், இதன் ஒளி எவ்வளவோ பிரகாசமடைந்திருக்கும்!

குலவிளக்கு: ஆசிரியர்: இளமைப்பித்தன். வெளியிட்டோர்: கதைவனம், புதுக்கோட்டை. விலை ரூ. 1–0–0.

மாப்பஸான், பல்ஸாக் போன்ற இலக்கிய மேதைகள் இன்று மேல்நாடுகளைவிடக் கீழ்நாடுகளில் பெரிதும் மதிக்கப்படுகிறார்கள். இவர்களைத் தவிர இன்னும் பல நல்ல ஆசிரியர்களும் போற்றப்படுகிறார்கள். அவர்கள் இதுநாள் வரை ஆங்கிலமாகவும், பிரெஞ்சு மொழியாகவும், மற்றும் பிறமொழிகளாகவும் இருந்து வந்ததால் நம் நாட்டுக்கு அவ்வளவாக அறிவிக்கப்படவில்லை. இன்றுதான் அவர்கள் இதயங்களைத் தமிழிலும் காணும் வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது. சிறந்த நான்கு மொழிபெயர்ப்புக் கதைகளோடு ஆசிரியரின் கைவண்ணம் ஒன்றையும் ஒன்று கலந்து இமயப் பதிப்பகத்தார் 'மனைவியைப்பற்றி' வெளியிட்டிருக்கின்றார்கள். தமிழகத்துக்குப் புதிய கருத்துக்கள் இல்லை, நூலில்; எனினும் பிறமொழி ஆசிரியர்களின் கதைகளைப் படிக்க ஆவல் கொண்டவர்களுக்கு இது பெரிதும் பயன் தரலாம்.

மனைவியைப்பற்றி: ஆசிரியர் க. கணபதி பி. ஏ., பி. எல். வெளியிட்டோர்: இமயப் பதிப்பகம், நாகப்பட்டினம். விலை ரூ. 1–0–0.

●

தோழர் சீனிவாசன் கதைகள் என்றால் அந்த அளவிலே தனிச் சிறப்புப் பெற்றுவிடுகின்றன. அந்த அளவுக்கு அறிமுகம்

தேவை இல்லாதவர் ஆசிரியர்; வீண் விளம்பரங்கள் தேவையில்லை அவரது கதைகளுக்கு.

தோழர் சீனிவாசன் புதுப் புது உவமைகள் கூறுகிறார். இடையிடையே அண்ணாவையும், புரட்சிக் கவிஞரையும் அடிக்கடி காண்கிறோம். அப்போதும் கதைக் கருத்தோடிணைந்தே அவர்கள் கருத்துக்களும் பக்குவமாகத் தூவப்பட்டிருக்கின்றன.

அந்தக் 'குட்டிக் காண்டேகர்' தமிழ் இலக்கிய உலகிற்கு நல்கிய சிறுகதைகள் ஒன்றல்ல—இரண்டல்ல; எண்ணற்றவை. அவைகளில் ஒருசிலவற்றைத் தொகுத்துச் செல்வ நிலையத்தார் தந்துள்ளனர், தமிழ் மக்களைக்களிப்பிக்க — ஆரம்ப எழுத்தாளர்களுக்கு வழிகாட்ட. அவர் வழி செல்ல விரும்பும் ஜூனியர்களுக்கும், பகுத்தறிவுக்குகந்த சிந்தனைச் சித்திரங்களைச் சிறிது கருத்தூன்றிக் கற்க விரும்பும் உளத்தவருக்கும் ஒரு அரிய வாய்ப்பை, 'துன்பக்கதை'யை அன்பர் சீனிவாசன் அளித்துள்ளார்.

'துன்பக்கதை', அதைத் தொடரும் சிறுகதைகள் அனைத்தும் அனைவரும் படித்தின்புற வேண்டியவை. மொத்தத்தில் அது ஒரு தித்திக்கும்தேன் கரும்புத் தொகுப்பு!

துன்பக் கதை: தீட்டியவர்: டி. கே. சீனிவாசன். வெளியிட்டோர்: செல்வ நிலையம், சென்னை-7. விலை ரூ. 0–8–0.

●

பக்தி, மூடநம்பிக்கைப் பழுதுகளால் பாழ்பட்டு, புரையோடிப் போய் நிற்கும் பூசுரர் தாசர்களை விடுவிக்க, தென்னாட்டின் தலையூற்றை வளப்படுத்த அண்ணாவின் அடிச்சுவட்டிலே ஆயிரமாயிரம் இளைஞரேறுகளை, வீரர்களை, வீராங்கனைகளைத் திராவிடம் பெற்றிருக்கிறது. முன்னணி வீரர்களின் அணிவகுப்பிலே, முதல் வரிசையிலே முதலிடம் பெற்று விளங்குபவர் மு. கருணாநிதி. எழெட்டு ஆண்டுகட்கு முன்னர் அவரைச் சாதாரணத் தொண்டராகக் கருதினர். விலை மதிப்பற்ற அவ்வைரம் அண்ணாவின் கருத்துக்களால் இன்று ஒளியேறி மக்கள் உள்ளமெனும் உயர்ந்த வானிலே உண்மை ஒளிவீசிப் பிரகாசிக்கிறது. அந்த வைரக்கல்லை, புதுமைப் பிழம்பை, புரட்சிப் புயல் பாய்ச்சும் திராவிடப் புலிக்குட்டியை மக்கள் நன்கு அறிந்து பயன்பெறக் காதலர் பண்ணையார் தங்கள் கடமையைச் செய்துள்ளார்கள்.

"கருணாநிதி யார்?" என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டிருக்கும் எண்ணற்ற இதயங்களுக்கு ஒரே விடையாக — அதிகார பூர்வமான மறுமொழியாக— புத்தகப் பதிலாக இந்நூல் வருகிறது.

ஜீவலட்சியம்

○●○

சமூகம் பண்பட வழிவகுக்கும் நாடகங்கள் இந்நாளில் பலப்பல ஆங்காங்கே அரங்கேற்றப்படுகின்றன. அந்தப் பட்டியலிலே இணைக்கப்படவேண்டிய 'ஜீவலட்சியம்' என்ற நாடகம் அதன் லட்சியக் கோட்டில் நிற்கிறதென்றே கூறவேண்டும்.

வெகுவாக முன்னேற்றப்படவேண்டிய தொழிலாளத் தோழர்களின் வாழ்வில் ஒளி வீசும் வகையில் நாடகத்தின் அமைப்பும் கருத்துக்களும் அமைந்துள்ளன. நாடகத்தில் குறிப்பாக ஜீவா—கலாவதி—கோபாலன் — இப்பாத்திரங்களை ஏற்று நடித்த நடிக, நடிகையரின் திறன் புகழப்படவேண்டியதே. இக்குழு தொடர்ந்து பயிற்சி பெற்றுவந்தால் எதிர்காலத்தில் அவர்கட்கு நல்ல வாய்ப்புக் காத்திருக்கின்றது!

ஆசிரியர், தோழர் பி. ஏ. கே. பழனிச்சாமி அவர்கள் தொகுத்த இந்நாடகம் திரு. சக்கரைச் செட்டியார் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் சென்னை, ஒற்றைவாடை தியேட்டரில் 7-10-51-ல் வண்ணை, தமிழ் இளைஞர் கழக நாடகக் குழுவினரால் நடிக்கப்பட்டு, பலரின் பாராட்டுதலுக்கு ஏற்றவாறு சிறப்பாக அரங்கேற்றப்பட்டமைக்கு மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

இந்நூலாசிரியர் தம் வாழ்க்கையில் புரட்சியை விளைவித்தவர். எனவே தன்னோடொத்த புரட்சி வீரரைப் பங்கமில்லாமல் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். இம்மாதிரியான உண்மை வாழ்க்கைக் குறிப்புக்கள் பெரிதும் வரவேற்கப்படுகின்றன இந்நாள், என்பதறிந்து நற்பணியாற்றிய காதலர் பண்ணையார் தமிழ் மக்களின் பாராட்டுதலுக்குரியவர்களாகிறார்கள்.

அவள் — ஏற்கெனவே 'காதல்' இதழில் வெளிவந்த நீண்ட சிறுகதை—மீண்டும் காதலர் பண்ணையின் வெளியீடாகத் தமிழ் மக்களின் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் நோக்கத்துடன், கதைக் கிசைந்த போட்டோ பிளாக்குகளைத் தாங்கி வந்திருக்கிறது. சமுதாய சீர்திருத்தம் பேசும் பாவனையில் சொற்கள் பல அடிபடுகின்றன. ஆனால் புதுமை ஒன்றும் கதையிலோ, அன்றிக் கருத்திலோ காணப்படவில்லை. ஓய்வாக ஒருமுறை இந்நூலைப்படித்துப் பார்க்கலாம்.

கருணாநிதி யார்?: அவள்: ஆசிரியர்: இளமுருகு பொற்செல்வி வெளியிட்டோர்: காதலர் பண்ணை, பெரியகுளம். விலை முறையே ரூ. 1-0-0; ரூ. 0-8-0

'பூவை'

யாருக்கு உங்கள் வாக்கு?



*** வரப்போகும் தேர்தல் ஒரு சீட்டாட்டத்தைப் போல! "வெற்றியோ, தோல்வியோ நிச்சயம் ஒரு கட்சியினருக்கு உண்டு. ஒருவர் நிற்கும் கட்சியின் பெருமையைக்கேட்டு நான் ஓட்டளிக்கமாட்டேன். 'மன்னர்கள் வாழும் கட்சி, மகான்கள் ஆசிபெற்ற கட்சியில்நிற்கிறேன்- அதனால் ஓட்டுப் போடுங்கள்' என்றால் 'அந்தப் பகுதிதானே ஆச்சரியமாகுதடி' என்பேன். பிரச்சாரம் கழுதையைக் குதிரையாகவும், குதிரையைக் கழுதையாகவும் அடிக்கக்கூடும்!

நான் காங்கிரஸ்காரன்—தேர்தலில் எங்கள் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகரை எதிர்த்து நிற்கும் சுயேச்சைப் பிரதிநிதிக்கு ஓட்டளிக்கப் போகிறேன். காரணம் என் கட்சிக்காரரைவிட அவர் நேர்மையானவர்-குறிப்பாகச் சட்டசபையில் வாய்திறந்து பேசக்கூடியவர். என் மதிப்பிற்குரிய நண்பருங்கூட! எனக்குக் கொள்கையைவிட, திறமைசாலியே—நேர்மைவாதியே தேவை, தேர்தலைப் பொறுத்தமட்டில்.

து. ப. நடனம்
கிடங்கல்

"பாஅல் புளிப்பினும் பகலிருளினும்
நாஅல் வேதநெறி திரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண்விளங்கி
நடுக்கின்றி நிலியரோ."

என்னும் புறநானூற்றுக்கு இலக்கணமாகப் "பால் தன் இனியசுவை நீங்கிப் புளித்தாலும், சூரியன் ஒளி இழந்து இருண்டாலும், நூல்களில் கூறப்பட்ட ஒழுக்கங்கள் மாறுபாடுற்றாலும், வேறுபாடில்லாத மந்திரச் சுற்றமே ஒரு நாட்டின் அரசியலை நல்ல நிலையில் நீண்டகாலம் நிறுத்தும்" என்பதை உணர்ந்தவனுக்கே என் வாக்கை அளிப்பேன்.

இரா. பாஷ்யம்
அனந்தமங்கலம்

★

இன்றைய காங்கிரஸ் ஆட்சியில் விவசாயி, நெசவாளித் தோழர்கள் படும் துயரம் சொல்லத் தரமல்ல. நாட்டின் இரு கண்கள் என்று கருதப்படும் அவர்கள் சிந்தும் துயரக் கண்ணீரைத் துடைத்து, அவர்கள் தேவைகளைப் பூர்த்திசெய்து, அவர்கள் வயிற்றில் பாலைவார்க்க முன்வரும் பாட்டாளியின் தோழனுக்கே எனது வாக்கு.

எம். பி. சௌந்தரராஜன்
வடக்கன்குளம்

*** ரூபாய் மூன்று பரிசு பெற்ற கடிதம்.

தேர்தலில் நிற்கும் அபேட்ச கர்கள் நாட்டிற்கு நன்மை பயக்கக்கூடியவர்களாகவும், நாட்டின் நலிவை எந்தமுறையில் துடைக்கலாம் என்று சிந்திக்கும் ஆற்றல் இருப்பவர்களாகவும், ஒழுக்கசீலர்களாகவும், பழமையைப் போக்கிப் புதுமையைக் கைக்கொள்பவர்களாகவும், பாட்டாளி மக்களின் வாழ்க்கையிலே படையெடுக்கும் புயலை அகற்றித் தென்றலை வீசச் செய்பவர்களாகவும் இருத்தல் அவசியம். இவை அனைத்தையும் விட நாட்டுப் பிரிவினையை நல்ல முறையில் ஆதரித்து, தென்னாட்டுப் பிரிவினை தேவை என்றும் அதற்கெனப் பாடுபடுகிறோம் என்றும் சூளுரைக்கும் எக்கட்சியினராயிருப்பினும (காங்கிரஸ் கட்சி உட்பட) அவர்களுக்கு வாக்குக் கொடுக்கலாம் என்பது என் முடிவான தீர்மானமாகும்.

இராசி. பட்டாபி
குடியேற்றம்

★

வாக்குரிமை வஞ்சம் தீர்க்கும் ஆயுதம். தேர்தல் நாள் நெஞ்சில் கொஞ்சமும் ஈரமின்றி வஞ்சகர்களைத் துஞ்சவைக்கும் பொன்னாள். ஏமாற்றும் கோமாளிகளை ஏய்க்க ஏற்றதொரு நாள். 'பங்கீடு' என்ற பெயரில் பதரையும் கல்லையும் போட்டு, பாட்டாளிகளின் இரத்தத்தை அட்டை போன்று உறிஞ்சும் இரக்கமற்ற அரக்கர்களின் அந்திம நாள். ஒன்றிற்கு இரண்டு விலை வாங்கும் கள்ளச்சந்தைக் கயவர்களைக் கழுவேற்றும் நாள். தாங்கவொண்ணாத் துயர்களைத் தாங்கித் தவிக்கும் ஏழைகளைக் காப்பாற்ற ஏற்ற நாள்.

'வாக்குரிமை' நம் அறிவின் ஆயுதம். நாமே நம் தலைவனை, நமக்குச் செய்யத்தக்கன செய்து தரக்கூடிய தலைவனைத் தேர்ந்தெடுத்து ஏனைய விரோதிகளை விரட்டக்கூடிய அணுகுண்டு. வேலை இல்லாத் திண்டாட்டம்; நாட்டில் பண நெருக்கடி; மரத்தை நட்டால் மழை கொட்டிவிடும் என்ற விந்தைக் கொள்கை; தாளமுடியாத வரிக் கொடுமை; இவை யாவற்றையும் ஒழிக்க முன் வருபவனுக்குத் தான் என் வாக்குரிமை!

கு. அ. சுப்பிரமணியம்,
கோயமுத்தூர்.

தமிழ் விருந்து

தமிழ்த்தும்பி

10. மலைநாட்டுத் தேர்தல்


பகற்பொழுதின் பிரகாசமான பொன்னொளி மறைந்து மாலை மஞ்சள் வெயில் வானத்தில் தவழ்ந்தது. ஒளிப்பிழம்பான கதிரோன் மேற்குத்திசை மலைக் குப்பின் தன் ஒளிமுகத்தைத் தாழ்த்தி மறைத்துக் கொண்டான். முகில் விளிம்புகளில் பற்பல வண்ணங்கள் தோன்றி மறைந்து நிறங்களின் நடன ஆட்டம் நடந்து கொண்டிருந்தது. மான் கூட்டம் ஒன்று அந்த மலைக்குப் பக்கத்தில் சென்று கொண்டிருந்தது. சில மான்கள் துள்ளி விளையாடின. சில வெகு வேகமாக ஓடின. அவற்றை ஜோடி மான்கள் வேடிக்கையாகவும் உற்சாகத் துடனும் துரத்தின. அந்தக் காதல் விளையாட்டில் அவைகளுக்கு எத்தனை கொள்ளை இன்பம்! சில மிகச் சோர்ந்து, கூட்டத்தோடு செல்லவேண்டுமே என்பதற்காகத் தளர்ந்த நடைபோட்டு நடக்க முடியாது நடந்தன. கூட்டத்தின் நடுவில் சிக்கித் தவித்த ஒரு ஆண் மான் கூட்டத்தை விலக்கி ஓரத்துக்கு வந்து எதையோ தன் அகன்ற விழிகளால் தேடிற்று. தேடின பொருள் கிட்டாததாலோ என்னவோ, அதன் கண்களில் ஏமாற்றம் குடிகொண்டது. முன்னேறின மந்தையைவிட்டு அது பின்னோக்கி வெகு வேகமாக வந்தது.

தான் ஓடியாடின எல்லா இடங்களிலும் அது தேடிப் பார்த்தது. அதன் முயற்சி ஒன்றும் வெற்றிபெறவில்லை. எங்கே தன் பிணை தன்னைத் தவறவிட்டிருக்கும் என்று அது யோசனை செய்தது. கவலை வளர்ந்துவிட்ட அதற்கு ஒன்றும் சிந்திக்க முடியவில்லை. முடிவில் ஏமாற்றத்தின் பிரதிபலிப்பாக அது மெதுவாகக் குரல் கொடுத்தது. அன்பின் அழைப்பைக் காற்றுத்தூதன் வெற்றிகரமாகச் சேரவேண்டிய இடத்தில் சேர்த்தால் குரல் கொடுக்கப்பட்டதன் அடிப்படை நோக்கம் நிறைவேறிவிடும் அல்லவா? ஆனால் குரலுக்குப் பதில் குரல் அந்தப் பரந்த வெளியில் எழவில்லை. ஆண் மான் மிக வேதனையோடு ஓலமிட்டது. அவதி, ஆயாசம், ஆற்றாமை எல்லாம் அதில் கலந்திருந்தன. திறந்த வெளியில் தவழ்ந்த அந்த ஓலம் மலைப்பிளவுகளில் எல்லாம் எதிரொலித்தது. மலைக்



குகையைத் தன் இருப்பிட
மாக்கிக் கொண்ட ஒரு புகார்
நிறப்புலிக்கு அந்த ஆசை ஒலி

மலைவெடிப்புகளில் எதிரொ
தது நன்றாகக் கேட்டது.
காதைத் தீட்டிக்கொண்ட



புலிக்கு வாயில் உமிழ்நீர் சுரப்பெடுத்தது.

●

மலை உச்சிகள் வெகு உயரத்தில் அமைந்திருந்தன. மழையைக் கருவில் கொண்டு ஓடமாட்டாது ஓடும் மேகத்திரளை அனுபாசமாக வழிமறிக்கும் அளவு உயர்ந்திருந்தன மலையுச்சிகள். மேகத்தோடு மலையுச்சி கைகுலுக்குவதால் வானம் நிலத்துக்கு மழையைத் தருகிறது. பாறை

களிலும், பெருங்கற்களிலும் மழைநீர் மோதி ஆறாக உருவெடுக்கும். ஈரப் பசையைத் தன்னுள் நிலம் அடக்கிக்கொள்வதால் செழிப்பு அந்த மலைவெளியில் வளருகிறது. பாறையில் பயிரிட முடியுமா? முடியாது. பதிலாகப் பலவகைப் பழமரங்கள் அங்கு வளருகின்றன. இயற்கையின் இனிப்பு பழவகைகளில் புகுகிறது. போதாததற்குத் தேனும் தினையும் அங்கு அமோகமாகக் கிடைக்கின்றன.

●

பெண் மானுக்கு ஆண்மான் விடுக்கும் அன்பு ஒலி, குகையில் கிடக்கும் புலி கேட்கும்படி பிளவுகளும் வெடிப்புகளும் நிறைந்தது அந்த மலைநாடு. பயன்தரும் மலையுச்சியையும், செழிப்பின் சின்னமாகப் பழமரங்களையும் கொண்டது அந்தப் பெருங்கல் நாடு. ஆனால் மக்கள் எல்லோரும் மிருதுத்தன்மை படைத்த இளகிய மக்களாக இருந்தனர். அவர்களின் நலனை நாட்டுத் தலைவன் தன் முக்கிய பணியாகக் கொள்ள வேண்டிய சூழ்நிலையை அம்மலைமக்கள் உண்டாக்கி வைத்திருந்தனர். அதனால் அவர்கள் தம் தலைவனைத் தம்முள் தேடி அவனிடம் பொறுப்பை ஒப்படைத்தனர். அரசனை அவர்கள் வைத்துக்கொள்ளவில்லை. ஏனெனில், அரசன் மனம் மாறினால் அவன் மக்களையே தன் சட்டதிட்டக் கெடுபிடியால் மாற்றிவிடுவான். தலைவன் மனம் மாறினாலோ, மக்கள் வேறொரு தலைவனைத் தேர்ந்தெடுப்பர்.

இத்தனை நாள் பதவி தாங்கிப் பணிசெய்த தலைவன் இயற்கையெய்திவிட்டான். ஆகையால் அங்கே வேறொரு தலைவன் அமரவேண்டிய நிலை ஏற்பட்டது. மக்கள் எல்லோரும் ஆண், பெண் என்ற இனவேறுபாடின்றித் தலைவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அங்கு இருந்தது. என்ன இருந்தாலும் தனி நபர் ஒவ்வொருவருமா தனித்தனித் தலைவர்களைப் பிரேரேபிக்கின்றனர்? மக்கள் தொகுதியைப் பலவகையிலும் கவர்ந்துவிடுகின்றனர் சிலர். மக்கள் எல்லோருமாகச் சேர்ந்து அவனைத் தேர்ந்தெடுக்கின்றனர். அதே போல மக்கள் தொகுதியின் ஒரு பகுதி ஒரு தலைவனைப் பொறுக்கிறது. எல்லோரிடமும் எல்லாம் நல்ல குணங்களாக அமைவதில்லை. இத்தலைவனுக்கும் சில குணக் குறைவுகள் காணப்பட்டன. இவன் தலைவன் பதவி வகிப்பதால் நாடு அவ்வளவு உருப்படப் போவதில்லை என்று எண்ணமிட்டாள் ஒரு பெண். அவள் வேறொருவனைப் பொறுக்கி எடுத்தாள்.

நாகரிகம் தெரிந்த மக்களிடையே கட்சியைப்பற்றி எடுத்துரைப்பதால் கேடு ஒன்றும் விளையாது. ஒவ்வொருவனும் தன் கட்சியின் கொள்கையையும் தன் தலைவனின் சிறப்பையும் நேர்மையையும் மற்ற எவரையும் தனிப்பட்ட முறையில் தாக்

காது சொல்லலாம். அப்போது தான் தலைவனின் தலைமைப் பதவியின் தகுதி தெளிவாக விளக்கப்படும். நாகரிகம் பெருமை பெற்ற அக்காலத்திலே வேறொரு தலைவனை முன் மொழிந்த அப் பெண்மணி இள வெயினி என்னும் பெயர் கொண்டவள். தொழில் வகை யால் அவளைக் குறமகள், குறத்தி எனக்கொள்ளலாம். பழைய இலக்கியங்களில், ஏன் இப் போதும் கூட மலை நாட்டவரைக் குறவன், குறத்தி என்று அழைப் பதில்லையா? அவள் தேடிப் பிடித்த தலைவனின் பெயர் ஏறைக்கோன். கருத்து வேறு பாடு ஏற்பட்டதால் இவன் தன் தலைவனின் தகுதியையும் திறமையையும், தன்னுடன் மாறுபட்டு மாற்றான் ஒருவனைத் தலைவனெனக் கொண்ட மற்ற வர்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஏறைக்கோனுக்கு எதிராக ஒருவனை நிறுத்திய அவர் களிடம் இளவெயினி உணர்த்த லானாள்.

"ஏறைக்கோன் தன்னைவிட அறிவில் சிறந்தவர்கள் தன் னிடம் குறையைக் கண்டால், தான் செய்ய எடுத்துக் கொண்ட திட்டத்தில் குற்றத் தையும் தவறையும் கண்டால், அவர்களைப் பொறுப்பான். அவர்கள் ஆலோசனையைக் கேட்டுத் தன் அறிவையும் பயன் படுத்தி வேலை செய்வான். தன்னிலும் அறிவில் குறைந்த வர்கள் தன்னிடம் தவறைக் கண்டால் அதைப் பொறுக்க மாட்டான். அதைப்பற்றி நினைக் கக் கூடச் செய்யான். ஏனெனில் பொறுப்பற்றவர்களும் மட்ட அறிவு படைத்தவர்களும் கூறும் சொற்கள் அரசாங்கம் முன்னேற உதவாது. அறிவில் பெரியவர் களுக்கு ஏறைக்கோனிடம் எப் போதும் அன்பு உண்டு.

"ஏறைக்கோன் மற்றவர்களு டைய வறுமைக்காகத்தான் வருத் தப்படுவான்; ஏனென்றால் தன் நாட்டில் இத்தனை வறியவர்கள் இருக்கிறார்கள் என்று அவன் காதுபட யாராவது சொன்னால் அதைக்கேட்க அவன் வெட்கப் படுவான். அவனைப் போன்ற எண்ணங்களைக் கொண்டவனால் தான் வறுமைப்பிணியை வெட்டி வீழ்த்திக் களைய முடியும். ஏழை எளியவர் நலனுக்கு அவன் ஒரு வனே உழைக்கக் கூடியவன்.

"போர்க்களத்தில் என்றும் வெற்றிக் கொடியை நாட்டும் தன்மை கொண்டவன் ஏறைக் கோன். எதிரிகள் நம் படையைப் போர்க்களத்தில் இகழாதபடி பார்த்துக் கொள்பவன் எம் தலைவன். எதிரிகளை எப்படியா வது புறங்காணும் முறையில் படையை நடத்திச் செல்லும் அறிவுக் கூர்மை படைத்தவன் ஏறைக் கோமான். மற்ற நாடுகள் நம் நாட்டிடம் தனிச் சிறப்புக் காட்டும்படி நாட்டுப்பணி செய் வான் நம் ஏறைக்கோன்.

"வில்லினைப் பூரணமாக வளைத் தலால் அகன்ற மார்பினைக்

ஹெபோஸ் பிரே

பாஸ்டன் நகரிலுள்ள டாக்டர் ஒருவர் புதுமையான ஊசியில்லாத இஞ்சுலேஷன் முறையைக் கண்டுபிடித்திருக்கிறார். அதனால் இஞ்சுலேட் செய்தால் வலியே ஏற்படுவது இல்லை அதற்கு அவர் சூட்டிய பெயர் தான் 'ஹெபோஸ் பிரே' என்பது.

கொண்டவன் எங்கள் ஏறைக் கோன். கொல்லும் வேல் படையைக் கொண்டவனும் காந்தள் மலரால் செய்யப்பட்ட மாலையை அணிந்தவனும் ஆவன் குறத்தலைவன் ஏறைக்கோன். நாட்டை நடத்தும் சபையின் முன்னர்க்கம்பீரமாக மேம்பட்ட நடை பழகுபவன் ஏறைக்கோன். அவன் கம்பீர நடையே மற்றவரிடம் அவனுக்கு ஒரு தனி மரியாதையை ஏற்படுத்தும்.

"இந்தக் குணங்களெல்லாம் ஏறைக்கோனோடு போட்டியிடுபவனிடம் இல்லை. ஆகையால் எந்தக் கண்கொண்டு பார்த்தாலும், ஏறைக்கோனே சிறந்தவனாவான். அவனே தலைவனாகும் தகுதி பெற்றவன்"

குறமகள் இளவெயினி தன் கட்சியைத் தெளிவாக விளக்கினாள். மற்றவர்களும் அவள் பேச்சில் உண்மையைக் கண்டனர்; ஏறைக்கோன் தலைவன் ஆனான்.

●

புறநானூற்றுப் பாடல் ஒன்று; தேர்தல் பிரச்சாரம் போல அமைக்கப்பட்டுள்ள ஒரு அருமையான பாடல். பாடினவர் குறமகள் இளவெயினி. தன் தலைவனின் அருமை பெருமைகளைத் தெளிவாக உணர்த்துகிறார் அவர். பெண் மக்களுக்கு இருந்த அறிவின் பெருமையையும், உண்மைக்காகப் போரிடும் உறுதியான வீரத்தையும் பாடலில் காணலாம். அறிவாளர் ஆலோசனையை நாடுவது, வறுமையைக் களையச் சூளுரை கொள்வது, படையின் பெருமையைக் காப்பது, மக்களிடம் மரியாதையைக் கப்பம் போல வாங்குவது எல்லாம் ஒரு இலட்சியத் தலைவனிடம் இருக்க வேண்டிய அம்சங்கள் என அவர் மொழிகிறார்.

தமர்தற்றப்பினது நோன்றலும்
பிறர்கையறவு தானாணுதலும்
படைப்பழி தாரா மைந்தினனாகலும்
வேந்துடையவையத் தோங்குபு
நடத்தலும்
நும்மோர்க்குத் தகுவனவல்ல வெம்மோன்
சிலை செல மலர்ந்த மார்பிற் கொலை வேற்
கோடற் கண்ணிக் குறவர் பெருமகன்
ஆடு மழை தவிர்க்கும் பயங்கெழு மீமிசை
எற்படுபொழுதி னினந்தலை மயங்கிக்
கட்சி காணாக் கடமா னல்லேறு
மடமானாகு பிணை பயிரின் விடர் முழை
இரும் புலிப் புகர்ப்போத் தோர்க்கும்
பெருங்கல் நாடனெம் மேறைக்குத்
தகுமே

—புறநானூறு

[தமர்தற்றப்பின்—தனக்குச் சிறந்தோர் தன்னைப்பிழைப்பின்; நோன்றல்—பொறுத்தல் கையறவு—வறுமை ஓங்குபு — கம்பீரமாக; சிலை—வில்; கண்ணி—மாலை; கடமான் ஏறு—கலைமான், பயிரின்—குரல் தருதல்;ஓர்க்கும்—கேட்கும்.]



தொடர் கதை

ராஜா ராணி

தங்கமணி

4. வாணிபுரத்து ராணி

ராஜசிம்மன் "ஆ!" என்று வீறிட்டு அலறினான்! அதே சமயத்தில் குளத்தின் எதிர்ப்புறத்திலிருந்து ஜிவ்வென்று பாய்ந்து வந்த ஒரு கூர்வேல், பாய்ந்து வந்த சிங்கக் குட்டியின் விலாப்புறத்தில் சதக்கென்று பாய்ந்தது! மறுகணம், பாய்ந்து வந்த சிங்கக் குட்டி அருகிலிருந்த கள்ளிப் புதரில் வீழ்ந்தது; துடித்தது; பதைத்தது; மரண கர்ஜனையிட்டுச் செத்துப் போயிற்று, சில வினாடிகளுக்குள்!

வேலைப் பாய்ச்சி, சிங்கக் குட்டியைக் கொன்று, இளவரசன் ராஜசிம்மனைக் காப்பாற்றிய மகமேரு, "இளவரசே" என்று கத்திக் கொண்டே எதிர்ப்புறத்திலிருந்து ஓடோடியும் வந்தான். பிரமித்து நின்ற ராஜசிம்மன் "மகமேரு, உன்னால் என் உயிர் பிழைத்தது. இந்தா பரிசு!" என்று நெஞ்சு மகிழச் சொல்லிக்கொண்டே தன் கழுத்திலிருந்த ரத்தினமாலையைக் கழற்றினான். மகமேருவின் கழுத்தில் அணிந்து அவனை நன்றியோடு கட்டியணைத்துக் கொண்டான்.

பிறகு, இருவரும் குளக்கரைப்பக்கம் ஓடினார்கள். குளக்கரையில் பிணம் போல் விழுந்து கிடந்த சின்னஞ்சிறு தங்கையைப் பார்த்தார்கள். அவள் மூர்ச்சித்துக்கிடந்தாள்.

"மகமேரு இந்தத் தங்கையைத் தூக்கிக்கொள்" என்றான் ராஜசிம்மன். மகமேரு அவளைத் தூக்கிக்கொண்டான். இருவரும் கூடாரத்தை நோக்கி விரைந்தார்கள்.

சிறிது நேரத்திற்குள் ராஜசிம்மனும் மகமேருவும் தூக்கி வந்த அந்தச் சிறுமியுடன் கூடாரத்திற்குள் புகுந்தார்கள். அங்கிருந்த புல்லணையின் மீது கிடத்தினான் மெய்க்காப்பாளன் மகமேரு. சில வினாடிகளுக்குள் சிறுமி மூர்ச்சை தெளிவிக்கப்பட்டாள். சிறுமி கண்

மலர்ந்து எழுந்து உட்கார்ந்தாள். சுற்றிச் சூழ்ந்து கிடந்த ராஜசிம்மன், மகமேரு இன்னும் சில வீரர்களையும் கண்டு விழித்தாள். திடீரென்று "அப்பா! அப்பா!" என்று கதறி அழ ஆரம்பித்தாள்!



ராஜசிம்மன் அவளை எவ்வளவோ சிரமப்பட்டு ஆறுதல் கூறி தேற்றினன்; அன்பாகவிசாரித்தான். சிறுமி குமுறி வந்த அழுகையைச் சமாளித்து அடக்கிக்கொண்டு சொன்னுள்.

"என்னுடைய சொந்த ஊர் வாணிபுரம். என் தந்தை ஒரு புரட்சிக்கவிஞர். அவர் அந்த நாட்டு ஏழைமக்களைப் பற்றியும் அவர்களின் வறுமையைப்பற்றியும் அவர்களின் தாழ்ந்த நிலையைப் பற்றியும் பாடுவார். அதோடு, அவர்கள் உழைப்பால் கொழுத்துக் கிடப்பவர்களைப் பற்றியும் பாடுவார். அத்துடன் இதற்கெல்லாம் காரணமான ஆணவம் பிடித்த அந்த நாட்டு ஆட்சியைத் தாக்கியும் பாடுவார். இதனுல், அந்த மன்னன் என் தந்தையை நாடு கடத்தி விட்டான்! என் தந்தையும் நானும் வாணிபுரத்தை விட்டு இந்தக் காட்டு வழியாய் வந்துகொண்டிருந்தபோது பயங்கரமான சிங்கம் என் தந்தையை... ஓ... ஓ...!" என்று மேலும் சொல்ல முடியாமல் கதறி அழுதாள் அந்தப் புரட்சிக்கவியின் மகள்!


எல்லோருக்கும் அவள் மீது இரக்கம் பிறந்தது!

"சகோதரி, அழாதேம்மா. இனி உனக்கு ஒரு குறைவும் இல்லை. எனக்கும் பேசிச் சிரித்து விளையாட ஒரு தங்கை இல்லையே என்ற குறையும் இன்றுடன் உன்னால் ஒழிந்தது. இனி நீ தான் தங்கை. நான் தான் அண்ணன். என்ன?" என்று அந்தச் சிறுமி யின் தோள் மீது கைவைத்து அன்பாகவும் ஆசையாகவும் கேட்டான் ராஜசிம்மன்.

"சரி அண்ணா" என்று விம்மலுக்கு இடையே கனிவாகச் சொன்னாள் கவியின் மகள். ராஜசிம்மன் அவளைக் கட்டிப்பிடித்துக் கொண்டு "தங்கையே, உன் பெயர்?" என்று குதூகலத்துடன் கேட்டான்.

"ராணி" என்றாள் கவியின் மகள், தேம்பிக்கொண்டே.

"ராணி, இன்னும் கூட அழுகிறாயே! எங்கேகொஞ்சம் சிரி!" என்று சிரித்துக் கொண்டே வேண்டினான் ராஜசிம்மன்.



சிறிது நேரம் கழித்துத் தன் பூப்போன்ற இதழை 'மெல் லப்பிரித்து, தன் முத்துப் பற்கள் மின்னவிட மெள்ளச் சிரித் தாள் ராணி! அவள் சிரிப் பதைக் கண்டு சூழ்ந்திருந்த எல்லோர் நெஞ் சமும் குதூகலத் தால் சிரித்து விம்மின.

அந்த ஆனந்த மயமான சம யத்தில் "ஆ! ஐயோ! புலி!! புலி!!!"...கூடா

ரத்திற்கு வெளியே இருந்து திடீரென்று ஒரே அலறல் வீறிட்டுக் கிளம்பியது!...

5. நல்ல சண்டை!

"ம்மே...ம்மே" என்று ஆடுகள் சப்தமிடுவதைக் கண்டதும் கதைப் புத்தகத்தை மூடிக்கொண்டு நிமிர்ந்து பார்த்தான் மாயவன். குன்றின் அடியில் மேய்ந்துகொண்டிருந்த ஆடுகளெல்லாம் கொஞ்ச தூரத்திலுள்ள வேல மரத்தடியில் மந்தையாய்த் தேங்கி, மாயவனின் வருகையை எதிர்பார்த்துக் கிடந்தன.

"அடே, பொழுது சாய்ந்து விட்டதா? நேரம் கரைந்ததே தெரியவில்லையே!" என்று அங்கலாய்த்துக் கொண்டே மாயவன் எழுந்தான். புத்தகத்தை மடியில் வைத்துக்கொண்டான். ஆடு மேய்க்கும் கழியை எடுத்துக் கொண்டான். மந்தையை விரட்டிக் கொண்டு ஊரை நோக்கிப் புறப்பட்டான். சிறிது நேரத்திற்குள் கிராமத்திற்கு வந்தான். ஆட்டுப்பட்டியில் மந்தையை ஒட்டிக் கூட்டிவிட்டுப் பண்ணைக்காரரிடம் சொல்லிக்கொண்டு அவசர அவசரமாக வீட்டிற்கு வந்தான். வீட்டு வாசல்திண்ணையில் அமர்ந்து என்னென்னவோ கதை பேசி மகிழ்ந்திருந்த ராஜாவும், ரஞ்சிதமும், மாயவனை வரவேற்றார்கள். மூவரும் குடிசைக்குள் போனார்கள். வேர்க்கடலை, வெல்லம், எள்ளு எல்லாம் போட்டு இடித்து, பிடித்துவைத்திருந்த வேர்க்கடலை உருண்டைகளைச் சட்டியிலிருந்து எடுத்து வந்தாள் ரஞ்சிதம். மாயவனுக்கு இரண்டு, ராஜாவுக்கு இரண்டு உருண்டைகளாகப் பங்கு போட்டு பிரித்துக் கொடுத்தாள் ரஞ்சிதம். மூவரும் வேர்க்கடலை உருண்டைகளைச் சாப்பிட ஆரம்பித்தார்கள்.

"நிரம்பவும் ருசியாக இருக்கிறதே!" என்றான் ராஜா.

"ரஞ்சிதம் செய்தது ஆயிற்றே! பின்னே எப்படித்தானிருக்குமாம்?" என்று ரஞ்சிதத்தின் திறமையைப் புகழ்ந்து சொல்லிவிட்டு "ரஞ்சி,அப்பா எங்கே?" என்று ரஞ்சிதத்தைக் கேட்டான் மாயவன்.

"வேலையிலிருந்து வந்து மறுபடியும் வெளியில் எங்கேயோ போயிருக்கிறார். இன்றிரவு நம் காளி கோயிலண்டை கூத்து நடக்கப்போகிறதாம். அப்பா நம்மையெல்லாம் தயாராய் இருக்கச் சொன்னார்." என்று சொல்லிவிட்டுத் தன் கையிலிருந்த உருண்டையை ராஜாவுக்குக் கொடுத்தாள் ரஞ்சிதம். ராஜா உருண்டையை வாங்கக் கையை நீட்டினான், தனக்குக்கொடுத்த இரண்டு உருண்டைகளையும் காலிபண்ணிவிட்டு.

"உம், வாங்காதே! அவளுடைய உருண்டை வேண்டாம். நான் கொடுக்கிறேன்" என்று தன்னிடமுள்ள உருண்டையை ராஜாவின் கையில் கொடுக்கப் போனான் மாயவன்.

"ராஜா அண்ணுச்சி! வாங்காதே. இந்தா இதை வாங்கிச் சாப்பிடு" என்று ராஜாவைத் தன் பக்கமாய் இழுத்துக் கொண்டாள் ரஞ்சிதம். மாயவனுக்கு ஆத்திரம் பிய்த்துக்கொண்டு வந்தது.

"ஏய் ரஞ்சி! உன் குறும்பை மறுபடியும் ஆரம்பித்து விட்டாயே? கோபம் வந்து கொண்டேயிருக்கிறது. ஜாக்கிரதை" என்று ரஞ்சிதத்தை மிரட்டினுன் மாயவன்.

"ஹை! உன் மிரட்டலுக்கும் உருட்டலுக்கும் பயந்து விட உன் மந்தையிலிருக்கும் ஆடு என்று என்னை நினைத்துக்கொண்டாயா அண்ணுச்சி? அதெல்லாம் ஒன்றும் நடக்காது!" என்று மாயவனைப் பார்த்து அலட்சியமாகப் பேசினுள் ரஞ்சிதம்.

"ஆ!... அவ்வளவு தைரியமா உனக்கு?" என்று கடா ஆடு போல உறுமிக்கொண்டு ரஞ்சிதத்தின் மீது பாய்ந்தான் மாயவன். ராஜா 'கப்'பென்று மாயவனைப் பிடித்துக்கொண்டான்.

"ராஜா அண்ணுச்சி, நீ விடு சொல்றேன்" என்று திமிறினுன் மாயவன். ராஜா விடவில்லை. அவன் மாயவனை உறுதியாகப் பிடித்துக்கொண்டு "வாயினுல் சண்டை பிடித்துக்கொண்டிருக்கும் போதே கைச்சண்டைக்குப் பாய்கிருயே, அண்ணுச்சி. கொஞ்சம் பொறுங்க அண்ணுச்சி" என்று சிரித்துக் கொண்டே சமாதானப் படுத்தினுன்.

ஒருவினுடி கழித்து, "இப்போது நீங்கள் இருவரும் கொடுக்கும் உருண்டைகளை நான் சாப்பிடவேண்டும். அவ்வளவுதானே? சரி, ஏதோ கொடுங்கள்." என்று இருவர் பக்கமும் இரண்டு கைகளை நீட்டினுன் ராஜா. இருவரும் உருண்டைகளைக் கொடுத்தார்கள். ராஜா இரண்டு உருண்டைகளையும் 'லபக்' 'லபக்' கென்று ஒரே வாயாகப் போட்டுக்கொண்டு "இப்...போ திருப்தி...தானே..." என்று திக்கினுன்; திணறினுன். அவன் திணறலைக் கண்ட மாயவனும், ரஞ்சிதமும் 'கலகல'வென்று உடல் குலுங்கச் சிரித்தார்கள்.

சண்டை சமாதானமாகப் போயிற்று!

அப்புறம், ராஜாவும், ரஞ்சிதமும் சமையல் வேலையில் ஈடுபட்டார்கள். ராஜா, அடுப்பு ஊதுவதையும், மிளகாய் நறுக்குவதையும் கண்ட மாயவனுக்கு ஆச்சரியமாய்ப் போயிற்று! "அடே! ராஜா அண்ணுச்சிக்குச் சமையல்வேலைகூடத் தெரியுமோ!" என்று மாயவன் வாயைப் பிளந்தான்!

"ஏ...ரொம்பத் தெரிகிறதே!" என்று சிரித்தாள் ரஞ்சிதம்.

"உம்...ம்...கூத்துப் பார்க்கப் போவதற்குள் சமையல் வேலை முடியட்டும்." என்று அதிகாரமாய்ச் சொல்லிச் சிரித்துக்கொண்டே அகல்விளக்கின் அடியில் அமர்ந்தான் மாயவன். மடியிலிருந்த கதைப் புத்தகத்தை எடுத்தான்; பிரித்தான்; படிக்க ஆரம்பித்தான்......

[தொடரும்]



ஆடும் மாடும்

டி.கே. சீனிவாசன்

ஆறாம் அத்தியாயம்

ஆழ்ந்த துயிலில் இருந்த சக்குவையே கூர்ந்து கவனித்தாள் மோகனா. அவளுடைய அந்தச் செயல் அவளுக்கே சிரிப்பை உண்டாக்கிற்று. தன்னைத் தவிர வேறெந்தப் பெண்ணின் அழகையும் பொறுமை இல்லாமல் அவளால் பார்க்க முடிந்ததேஇல்லை இதுவரையில். ஆனால் இன்று மங்கையர் குலத்துக்கே ஒத்துவராத அந்தச் செயலைச் செய்ய அவளுடைய மனம் துணிந்திருந்தது!

திடீரெனச் சேகரன் உருவம் அவள்முன் தன்னைக் காட்டிக் கொண்டது.

"என்னுடனேயே இருந்து விடு, மோகனா! வேண்டுமானால் நானே உன்னை......" என்ற அவனுடைய வேண்டுகோள் அவள் காதுகளுக்குள்ளேயே தங்கியிருந்து ஒலிக்கத்தொடங்கிற்று.

சலனமற்ற குளமாக இருந்த அவள் இதயம் உடனே அலை மோதும் கடலாகஉருப்பெற்றது. "சம்மதிக்கிறேன் சேகர்!" அதைச் சொல்லிச் சொல்லிப் பார்த்தாள். பயமுறுத்திக் கொண்டிருந்த எதிர்காலம் பாதுகாப்பு நிறைந்ததாகக் காட்சி அளித்தது. நிலைகுலையாத—நிம்மதி நிறைந்த—நெடுநாட்களாக அவள் தேடியலைந்த அந்த இன்ப வாழ்க்கை! உவகையால் தாக்கப்பட்ட நரம்புகள் அவளுடைய உடலைச் சிலிர்க்கச்செய்தன. விதவிதமான சித்திரங்களாக வெவ்வேறு கோணங்களில் வெளி உலகம் அவள் உருவைப்பார்த்து மகிழும். புகழ்—மதிப்பு—புனிதமே உருவான வாழ்வு! அவள் ஓடித் தொடர்ந்தபோது தன் உருவைக்காட்ட மறுத்த அந்த நல்வாழ்வு இன்று தானே வந்து காலடியில் சரண் அடைகிறது.

இதயம் மகிழ்ந்தது—இதழ்கள் மலர்ந்தன—எண்ணங்களில் எல்லாம் நறுமணம் தவழ்ந்தது!

"என்னை மோசம் செய்து விடாதே, அக்கா!"—சக்கு கதறத்தொடங்கினாள், மோகனாவின் உள்ளத்திலிருந்து.

பறந்துகொண்டிருந்த விமானம் சிறகொடிந்து கீழே விழுந்ததைப் போலானாள் மோகனா. பரிதாபத்துக்குரிய அந்தப் பெண்ணைப் பச்சாத்தாபம் நிறைந்து பார்த்தாள். தன் வாழ்வில் அடியெடுத்து வைக்கப் போகும் ஆணை வரவேற்கக் காத்திருந்த அந்தப் பெண்ணின் பொலிவும் பூரிப்பும்.... துணிவும் அழகும் தமக்குள் தொடர்பேற்படுத்திக்கொண்டு ஒரு பெண்ணின் உடலில் கவர்ச்சியையும் கம்பீரத்தையும் தீட்டிக்காட்டும் அந்தக் கன்னிப்பருவம்! இளமை எழுப்பும் இன்பக் கற்பனைகளின் சாயல் சக்குவின் முகத்தில் சதிராடிக்கொண்டிருந்தது. அந்தக் கள்ளங்கபடமற்ற பெண்ணின் கனவுகள் கலைக்கப் பட்டால்......?

"அதிர்ஷ்டம் உன்னைத் தேடி வருகிறது; அலட்சியம் செய்து விடாதே! பின்னால் அவதிப்பட நேரும்" என்றது ஒரு குரல்—எல்லாம் அவள் உள்ளத்துள்ளிருந்துதான்.

'அதிர்ஷ்டம்!' என்று ஒரு முறை சொல்லிப் பார்த்தாள். மறைந்துபோன சில நிகழ்ச்சிகள் அலைந்துகொண்டிருந்த அவள் நினைவுகளில் தட்டுப்பட்டன. அந்த நாள்......!உடலின் வளர்ச்சியும் உள்ளத்தின் மகிழ்ச்சியும் இயற்கையின் ஏதோ ஒரு தேவைக்காக ஒரு பெண்ணிடத்தில் உருவாகி உறவாடும் அந்த நாள்.........! பொன்னைப் போலப் பாதுகாத்தார்கள் அவளுடைய பெற்றோர் தங்கள் பெண்ணை. வீட்டு வேலைக்கெல்லாம் இவள் உதவி தேவைப்படுவதில்லை. படித்





தாள்—பயனுள்ள ஏடுகளை அல்ல; நாவல்கள், கதைகள், கற்பனைகள்—நஞ்சை நாகரிகம் என நாட்டில் பரப்பும் நானாவித குப்பைக் கூளங்கள் எல்லாம் நளினமான அவள் இதயத்தை நாசப்படுத்தி விட்டன. அந்த ஏடுகளில் உருவாக்கப்பட்டிருந்த எழிலரசர்கள் அவள் இதயத்திலேயே தங்கிவிட்டனர். ஆனால் நடைமுறை உலகில் நடமாடும் மன்மதர்கள் அவர்களுக்கு ஈடானவர்களாக இருந்ததேயில்லை. தட்டிக் கழித்தாள் எல்லோரையும். வழக்கு விசாரணைக்கு வரும்போதெல்லாம் வாய்தா கேட்பதே அவள் வழக்கமாக இருந்தது!

ஆனால்......அவளுடைய இதயத்தின் ஏக்கத்தை உடலின் வேட்கைபுறக்கணித்துவிட்டது. தவறிவிட்டாள்...இல்லை, இல்லை......தடுமாறிப்போனாள். பிறகு...? மனிதத் தன்மையைவிட மானத்துக்கும் மரியாதைக்குமே அதிக மதிப்புக் கொடுக்கும் சமுதாயம் அவளை உதவாக்கரை என ஒதுக்கிவிட்டது. வீதியே வீடானது அவளுக்கு. உலகம் தெரியாமல் ஏதோ ஒரு சிறு அறைக்குள்ளிருந்து கற்பனைகளால் அழகை உருவாக்கிய அந்த எழுத்தாளர்கள் மட்டும் வாழத்தான் செய்தார்கள்!

அதிர்ஷ்டம்—அதிர்ஷ்டம்—அதிர்ஷ்டம்!—அந்த ஒரே சொல் அவளைச் சுற்றிச் சுழன்று சூறையாடியது.

சுற்றியலைந்தபோது அவளுடைய சுற்றுச்சார்புகள் கற்றுக்கொடுத்த உண்மைகள் அவள் கவனத்துக்கு வந்தன. ஒரு பெண் ஆதரவிழந்து விட்டால்...? விழிகளிலேயே வெறியைக் கலந்து பார்க்கும் ஆண்கள் அவளை விழுங்கியே விடுகிறார்கள்!

தன்னைப்போலவே அந்தப் பெண்ணையும் தவிக்க விடுவதில் அவளுக்கு விருப்பமே இல்லை.

"அதிர்ஷ்டம்! எண்ணாமல் திட்டமிடாமல், அதற்கென்று எதுவுமே செய்யாமல், எப்படியோ ஏற்படுவது—என்பது தானே அதற்குள்ள விளக்கம். சோம்பேறித்தனத்தின் சின்னம் அந்தச் சொல்! சோதாக்கள் அதைத் தேடியலையட்டும். சீ! எனக்கு வேண்டாம்" என்று ஆசைக்கு அறிவால் அணை அமைத்தாள் மோகனா.

சோமு—சேகர்! ஒருவன் அவளையே பலியாகக்கேட்கிறான்; மற்றவன் அவளுக்காக எவளோ ஒருத்தியைப் பலியிடத் துணி

ளுன்! இருவரும்...சீ!...இந்த ஆண்கள்...! எட்டி உதைக்கும் கால்களில் எல்லாம் பட்டு உரு ளும் பந்தைப்போலத்தானே பெண்களை மதிக்கிறார்கள்!

உயர இருந்து கீழே பாயும் நீர்வீழ்ச்சியின் புகைச்சலும் பேரிரைச்சலும் ஒளியுருவாக வும் ஒலியலையாகவும் அவள் இத யத்தில் உருப்பெற்றன. வெறிச் சென்ற பார்வையோடு சக்கு வையே பார்த்தாள். உல கத்தை உணராத அந்தப் பேதை இன்னமும் உறங்கிக் கொண்டுதானிருந்தாள். அவதி —அதன் மிக அருகிலேயே முழு அமைதி! துக்கத்தின் விளிம்பையே தொட்டுவிட்டது அவள் உள்ளம்.

'பொல பொல' வென்று மோகனாவின் விழிகள் உதிர்த்த கண்ணீர்த் துளிகள் சக்குவின் முகத்தில் பட்டுத் தெறித்தன; அவளும் விழித்துக்கொண் டாள். நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்று புரியாமல் திலகுலைந்தாள் மோகனா.

விரல்களால் ஒத்தியெடுத்து அந்தக் கண்ணீர்த் துளிகளைப் பார்த்தபோது சக்குவுக்குச் சஞ்சலமோ சந்தேகமோ ஏற் படவே இல்லை; மாறாக, மகிழ்ச்சி தான் பொங்கி வழிந்தது.

"உண்மைதான்!" என்று முணுமுணுத்தன அவள் உதடு கள்.

"என்ன சக்கு? அந்தக் கண்ணீர்......"

"கண்ணீர் அல்ல அக்கா. பன்னீர்...!" என்று பதிலைப் பாதியோடு நிறுத்திய சக்குவின் முகத்தில் நாணங்கவிந்தது.

புலியென்று பதுங்க அது பொம்மையாக இருந்ததை எண் ணிச் சிரித்தாள் மோகனா.

"கனவேதும் கண்டாயா, சக்கு?"

"ஆமாம் அக்கா, எல்லோரும் வந்திருந்தார்கள். மணவறை... அதில் நானும் அத்தானும்..."

"அப்போது பன்னீர் தெளித்தார்களா?"

"ஆமாம். மேளங்கூடக் கொட்டினார்கள்!" என்றுசொல் லிக்கொண்டே எழுந்தோடிப் போனாள் அவள்.

மோகனாவுக்கு மேளத்தின் தாள இசை கேட்கவில்லை; அதன் அதிர்ச்சிதான் ஏற்பட் டது. இவளை மறந்து மனக் கோட்டை கட்டும் சேகரன்—



அவனை நினைந்து களியாட்டம் போடும் இவள்! எல்லை இல்லாத மகிழ்ச்சியால் தள்ளிக் குதித்தோடும் இவளுக்கு மட்டும் தன் எதிர்காலம் எரிந்து நாசமாகப் போவது தெரிந்தால்...?

திறந்திருந்த வாயில் கதவு வழியாகத் தெருவின் ஒரு பகுதி தெரிந்தது அவளுக்கு. வெய்யிலுக்குப் பயந்து பதுங்கியிருந்த உயிர்கள் வீதியில் தலைகாட்டின. உழைப்புக்கும் உறக்கத்துக்கும் இடைவேளையான அந்த மாலை நேரத்தில் உலகம் உல்லாசத்தைத் தேடி அலைந்துகொண்டிருந்தது.

எவளோ ஒரு பிச்சைக்காரி அந்த வீட்டு வாயிற்படியில் வந்து நின்றாள். "அம்மா!" என்று அவள் குரல் கொடுத்து முடியக்கூட இல்லை. எங்கிருந்தோ விசியெறியப்பட்ட பந்து அவள் பானையில் மோதி அதை உடைத்துவிட்டது. அழத் தொடங்கினாள் அந்த அனாதை. அதைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தான் பந்து விளையாடிய சிறுவன். கேளிக்கையைத் தேடித்திரிந்த உலகத்துக்கு இதுவும் ஒரு வேடிக்கையாகத்தான் தோன்றியிருக்க வேண்டும். எவருமே வேதனையை உணரவில்லை; எல்லோரும் தம் காரியத்திலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தனர்.

எண்ணங்களை உதிர்த்தது மோகனுவின் இதயம். மனித வாழ்க்கையும் இப்படித்தானே ...பந்தும் பானையும் மோதிக்கொண்டன. பந்துக்குப் பங்கமேதும் ஏற்படவில்லை; பானை தான் உடைந்தது! வாழ்க்கை... இருபுறங்களிலும் பயங்கரமே உருவான பள்ளத்தாக்குகளைக் கொண்ட செங்குத்தான சிகரம். நிறுத்தி நிதானமாக அடியெடுத்து வைத்து அதைக் கடந்தாகவேண்டும். ஒருமுறை தவறி விழுந்தால்.......ஆண்கள் என்னவோ தப்பித்துக்கொள்ளுகிறார்கள்; பெண்களால் மட்டும் மீளவே முடிவதில்லை! இயர்கையின் இந்த விசித்திரத்தைப் பார்த்துத்தான் மனிதனும் பந்தையும் பானையையும் செயற்கையாகச் செய்துவைத்திருக்கிறானோ!

* * *

மோகனு அந்த அறையை விட்டு வெளியேறி வெகுநேரம் ஆகியிருந்தது. எப்போதுமே தனிமையை அமைதிக்குப் பலியிடாத அந்த இரு நண்பர்களும் வழக்கத்துக்குமாறாக வாயடைத்துப்போய் நின்றனர்.

சேகர்—சோமு! கலைக்கூடமும் ஆராய்ச்சிசாலையும் கருத்தொருமித்ததைப் போன்ற உலகத்தின் எந்த விதிக்கும் உட்படாத அவர்கள் நட்பு...! எத்தனையோ தடவைகளில் அந்த இரு இதயங்களும் ஒளிவு மறைவில்லாமல் உறவாடியிருக்கின்றன. சூடான வாதங்கள்—சுவை மிக்க கிண்டல்கள்—இறுதியில் எவரையும் சூன்யத்தில் கொண்டுபோய் நிறுத்தும் முடிவுகள்! ஆனால் இன்று...? தீட்டப்பட்ட சித்திரங்களில்

இரண்டு இடம் பெயர்ந்து உரு வளர்ந்து திகைத்து நிற்பது போலவே இருந்தனர்.

வீதியில் நிறைந்திருந்த நிம்மதியை, இடைவேளை விட்டுக் குரைக்கும் நாய்கள்தாம் துரத்திக்கொண்டிருந்தன. திடீரென அந்தப் பகுத்தறிவற்ற உயிர்களுக்குப் போட்டியாக முளைத்தது பாவையர் கூட்டம். தனிப்பட்டோர் விவகாரங்கள் எல்லாம் தண்ணீர்க் குழாயில் தவிடுபொடியாயின. வீதியில் சாமான்களைக் கூவிவிற்றுச் செல்லும் அங்காடிக்காரர்களின் குரல்களைக்கூடக் கோதையர் கூட்டம் தம் கூச்சலால் மறைத்துவிட்டது. ஆனால் அந்த அறை மட்டும், புகைவண்டி புறப்பட்டுப்போய் நிமிடங்கள் பல கடந்த இருப்புப்பாதை நிலையத்தைப் போலவே நிம்மதியில் சூழ்ந்திருந்தது.

"சேகர்...!" என்றான் சோமு. அவன் செய்து முடித்த அபாரமான காரியங்களையெல்லாம் சொல்லிச் சேகரனை ஆச்சரியத்துக்குள்ளாக்க வேண்டும் எனத் துடித்தது அவன் மனம்.

ஆனால் சேகரன் குழம்பிக் கிடந்தான். வெட்கமும் வேதனையும் அவனைச் சுற்றி வேட்டையாடின. ஏமாற்றி மோகனாவை அழைத்து வந்தது—எதற்கும் இடங்கொடாமல் அவள் பேசியது—எதிர்பாராத நேரத்தில் சோமு நுழைய நேர்ந்தது......எழில் ஒன்றுக்கே அர்ப்பணிக்கப்பட்ட அவன் இதயத்தில் தணல் நிறைந்து தகிதத்துக்கொண்டிருந்தது!

"ஏன் மௌனஞ் சாதிக்கிறாய் சேகர்? மாயை மகான்களையே ஆட்டிவைக்கிறதே! நீ மனிதன் தானே; அது உன்னை எளிதில் மயக்கிவிட்டது. வீணாக ஏன் மனதைப் புண்படுத்திக் கொள்ளுகிறாய்?"

ஆத்திரம் துளிக்கூடத் தொனிக்கவில்லை அவன் குரலில்; மாறாக அனுதாபந்தான் நிறைந்திருந்தது.

"சோமு! மோகனா நிரபராதி; நான்தான்..." என்று இழுத்து நிறுத்தினான் சேகர்.

"கவலைப்படாதே. இந்த மாதிரி விஷயங்களில் எளிதில் தீர்ப்புக் கூறிவிடமாட்டேன் நான். மேனகை தவறு செய்தாளா அல்லது விசுவாமித்திரன் தவறினானா? நிர்ணயிப்பது மிக மிகக் கடினம். மேனகை மயக்குவதற்காகவே அனுப்பப்பட்டவள்; தன் கடமையைச் செய்து முடித்தாள். விசுவாமித்திரன் ஏதோ ஒரு இலட்சியத்துக்காக ஏற்கனவே தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டவன்; எளிதில் தடுமாறிவிட்டான். ஆனால்..."

முட்களாக இல்லை அந்தச் சொற்கள்—தைப்பதோடு நிறுத்திக்கொள்ள; ஈட்டியாக மாறிச் சேகரன் இதயத்தைப் பிளந்தெறிந்தன.

"சகுந்தலை பிறந்தவுடன் தான் சங்கடமே ஏற்படுகிறது!" என்று சொல்லி முடித்தான் சோமு.

"என்னைக் குறைகூறு, சோமு. ஒரு பெண்ணைப் பழிக்காதே" என்று இறைஞ்சினன் சேகரன்.

"பெண்...! ஆணை மயக்குவதற்காகவே இருக்கும் போதைப் பொருள்களில் அவளும் ஒருத்தி! இது உனக்குப் புரியாது. நீ சித்திரக்காரனாக இருப்பதால் எதையும் நிர்வாணமாகப் பார்க்கும் சக்திபெற்றிருக்கின்றன உன் விழிகள். ஆனால்... நீ சிந்தனைவாதியாக இல்லாதபடியால் உண்மையை நிர்வாணமாகப் பார்க்க உன் உள்ளம் கூசுகிறது!"

"விவேகத்தை விலக்கிவிட்டுப் பேசுவதுதானா உண்மை?"

"இல்லை. மயக்கும் மோகினிகளாகத்தான் மங்கையர் இருக்கின்றனர். அது அவர்கள் குற்றமல்ல—சமுதாயத்தின் கோளாறு! ஆணை வசீகரிக்கவே பெண் தயார்செய்யப்படுகிறாள். அழகுச் சிலையாக—அலங்கார உருவாக—ஆண்களைக் கவர்ச்சிக்கும் சக்தியாகத்தான் பெண்களை வளர்க்கிறார்கள். ஆனால் பெண்களுக்காக ஆண்களை வளர்ப்பதில்லை—தயாரிப்பதில்லை —பண்படுத்துவதில்லை!"

"மன்மதனுக்குக் கொடுக்கப்பட்ட ஆயுதங்கள் வில்லும் அம்புந்தானே; அவற்றை வைத்துக்கொண்டு அவன் வேட்டையாடுகிறான்; கூச்சலும் ஓசையும் அவனைக் காட்டிக்கொடுத்து விடுகின்றன. ஆனால் ரதி ஓசைப்படாமல் தூண்டில் போடுபவள்; வெளிக்குத் தெரியாமல் வேலையை முடிக்கிறாள். சேகர்...! பெண்ணை நளினமும் வலாகமும் மென்மையும் நிறைந்த பொருளாகவே வளர்த்து நிழல் தரும் உருவாக ஆக்கிவிட்டார்கள். உலகத்தில் ஓடியாடித் திரியும் ஆண் அந்த நிழலைக் கண்டவுடன் சரண் அடைந்துவிடுகிறான்!"

"அப்படியானால் யார்தான் குற்றவாளி?"

"இந்த உலகத்தில் எவருமே குற்றவாளி அல்ல. சதுரங்க ஆட்டத்தில் வெட்டி வீழ்த்தப்படும் காய்கள் போலத்தான் இன்றைய சமுதாய அமைப்பில் மனிதர்களும்!"

"ஆனால் உருக்குலைவது பெண்தானே?"

"உருக்குலையத்தானே ஒரு பெண் ஆணைத்தேடி ஓடுகிறாள்! உருப்படுவதாகியிருந்தால் அவள் ஒதுங்கி அல்லவா இருக்க வேண்டும்! விரும்பி வரவேற்கும் இந்த வினைக்கு ஆண் எப்படிப் பொறுப்பாளியாவான்?"

பதில் சொல்ல முடியாமல் தத்தளித்தான் சேகர். அவனுடைய கலை உணர்ச்சியும் பண்பாடும் அவனைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்தன.

* * *

வரம்பை மீறிவிட்டதால் வழுக்கி விழுந்துவிட்டான் கதிரவன். அவன் உருவம் மறைந்ததே தவிர ஒளிமட்டும் மங்கவில்லை.

"கனவு பலிக்குமா, அக்கா?" என்று கேட்டுக்கொண்டே காட்சியளித்தாள் சக்கு.

குழம்பிக் கொண்டிருந்த மோகனவின் உள்ளத்தில் கொந்தளிப்பு ஏற்பட்டது. சோமு—சேகரன்—சக்கு—இவள்! நாலு ஜாதிச் சீட்டுகளும் துருப்பாக இருக்கத் துடித்துக்கொண்டிருக்கின்றன! தன் நிலை மறந்தாள். குப்புறக் கவிழ்ந்த குடத்திலிருந்து 'குபு குபு' என்று நீர் கொட்டுவதைப் போலச் சிதறி விழுந்தன அவள் எண்ணங்கள் வெளியே.

"பெண்களுக்கு உலகம் குறுகிச் சிறுத்திருக்கிறது, சக்கு. ஆண்களைப்போல அவர்கள் பலரோடு பழக முடிவதில்லை. துச்சமாக மதிக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்சத்தால் ஆண்களை விட்டு விலகியே இருக்கிறார்கள். அதனால்தான் குறிப்பிட்ட சிலருக்குள்ளேயே அவர்கள் தங்களுக்குத் தேவையானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள நேரிடுகிறது. ஆனால் பலரோடு பழகும் உரிமையை உண்டாக்கிக்கொண்ட ஆண்கள் இருப்பதில் சிறப்பானதைத் தேடி அலைகிறார்கள்."

நல்வாக்கைத் தேடி வந்த சக்குவின் காதுகளில் நாராசம் பாய்ந்தது. அசையாச் சிலையாகி அப்படியே நின்றாள். மோகனா பேச்சைத் தொடர்ந்தாள்.

"ஆதிகாலத்தில் அரசகுமாரர்களை எல்லாம் அழைத்துச் சுயம்வர மண்டபத்தில் உட்கார வைத்து மாலையும் கையுமாக மணமகளை அனுப்புவார்கள்—தேவையானவனைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள. இப்போது காலம் மாறிவிட்டதல்லவா? கருத்தும் மாறிவிட்டது! ஒவ்வொரு ஆணும் மாலையுங் கையுமாக ஊரைச் சுற்றித் திரிகிறான். வீதிகளையும் வீடுகளையுமே சுயம்வரமண்டபமெனக் கருதுகிறான். ஆனால் இந்த வேட்டைக்காரர்களை உலகம் விடுதலை செய்துவிடுகிறது. பரிதாபத்துக்குரிய விலங்குகளுக்குத்தான் பாதுகாப்புச் சட்டப்படி தண்டனை கிடைக்கிறது!"

இதற்குமேல் சக்குவால் பொறுக்க முடியவில்லை.

"என்ன அக்கா, சொல்லுகிறாய்?" என்று உரத்தே கேட்டுவிட்டாள்.

"உண்மையைத்தான்......." என்று சொல்லிக்கொண்டே தலையை நிமிர்த்திய மோகனா திடுக்கிட்டுவிட்டாள். சிறிது நேரத்துக்கு முன்னால் ஒளி படர்ந்திருந்த அந்தப் பெண்ணின் முகத்தில் கவிந்திருந்த இருள்......

"பழைய வாழ்வை எண்ணி ஏதேதோபேசிவிட்டேன்,சக்கு" என்று சொல்லிக்கொண்டே எழுந்து அவளை நெருங்கினாள்.

"உன் கனவு கட்டாயம் பலிக்கும் சக்கு. ஏன் உன் அத்தான் இன்னும் ஏற்பாடு செய்யாமல் இருக்கிறார்?" என்றாள்.

சக்கு பதில் ஏதும் சொல்லவில்லை. மோகனாவைத் தன்னோடு சேர்த்தணைத்துக் கொண்டாள். பிறகு அன்பும் ஆதரவும் நிறைந்த குரலில், "ஆண்கள் மேல் உனக்கு ஏன் அக்கா இவ்வளவு வெறுப்பு?" என்றாள்.

"பெண்களை அவர்கள் பேசும் அளவுக்கு மதிப்பதில்லை"

"போ அக்கா! பொய் சொல்லுகிறாய். மலருக்கு ஈடாக அல்லவா பெண்களை எண்ணி மனங்களிக்கிறார்கள் ஆண்கள்"

"மதி என்று கூடத்தான் சொல்லி மகிழ்கிறார்கள். ஆனால் மலர் சோரம் செய்கிறது—மதியிலே களங்கம் காணப்படுகிறது. இருந்தாலும் இவை யிரண்டும் மதிப்பை இழப்பதே இல்லை! ஆனால் ஒரு பெண் தவறிவிட்டால்......?"

"சிந்திப்போன பால்தானே, அக்கா, அவள்?"

"அதையாவது திரட்டிச் சேகரித்து விடலாமே?"

"அப்படியானால் துண்டு துண்டாக உடைந்த கண்ணாடிப் பாத்திரம் என்றுதான் வைத்துக்கொள்ளேன்"

"அதைக்கூட ஒட்டவைத்து விடுகிறார்களே!"

உவமைகள் எல்லாம் உதவாக் கரையாகிவிடவே சக்குவுக்குச் சலிப்பு ஏற்பட்டது.

"பின் என்னதான் அக்கா, அவள்?" என்றாள்.

"எரிந்து புகைந்து கருகிப் போன விறகு—மறுபடியும் அதை உருவாக்குவதென்னவோ......"

இதுவரையில் கேட்டே இராத இந்த விளக்கம் கேள்விக் குறிகளைத் தொடர்ந்து எழுப்பியது சக்குவிடம். ஏதோ ஒரு வேதனை மோகனாவைப் பிதற்றச் செய்கிறது. இந்த நேரத்தில் அதைப்பற்றிப் பேசுவது......

"கவலைப்படாதே, அக்கா. கடவுள் உனக்கு நல்லவழி காட்டுவார்" என்ற கடைசி ஆறுதல்மொழியைச் சொன்னாள், சக்கு.

"மனிதர்கள் கடவுளைப் பற்றிக் கவலைப்படுகிற அளவுக்கு கடவுள் மனிதர்களைப்பற்றிக் கவலைப்படுவதே இல்லை!" என்று முணுமுணுத்தன மோகனாவின் உதடுகள்.

நெடுநேரம் அங்கு அமைதியே ஆட்சிபுரிந்தது. ஒளிக்குப் பிரிவுபசாரமும் இருளுக்கு வரவேற்பும் ஏககாலத்தில் நடக்கும் நேரம் அது. ஆத்திரமும் அருவருப்புமாகச் சந்திக்க நேர்ந்த அந்த இரண்டு பெண்களிடத்திலும் அப்போது அன்பையும் அனுதாபத்தையுந் தவிர வேறெந்த உணர்ச்சியும் மிஞ்சவில்லை.

நெடுநேரங் கழித்து, "நான் வேண்டுமானால் உன் அத்தானைச் சந்தித்துப் பேசட்டுமா, சக்கு?" என்றாள் மோகனா.

மலர்ந்த முகத்தோடு அவளையே பார்த்தாள் சக்கு; ஆனால் பதில்மட்டும் சொல்லவில்லை.

"உன்னை மோசம்செய்துவிட மாட்டேன், சக்கு! உறுதியாக நம்பு. ஆனால் இப்படி நீங்கள் இருவரும் இருப்பது எனக்குப் பிடிக்காததால்தான்..."

"போ அக்கா! நீ விளையாடுகிறாய்! எப்படியாவது இதைச் செய்து முடித்தால் உனக்குக் கோடி புண்ணியம் உண்டு!" [தொடரும்]

துப்பறியும் நாவல்

மு. அண்ணாமலை

தமிழ்நாட்டில் துப்பறியும் நாவல்கள் புற்றீசல் போலத் தோன்றிக் காலப் போக்கில் இலக்கியத் துறையில் சரியான இடம்பெறு தொழிந்தன. இன்றும் இங்கிலாந்தில் இத் தகைய நாவல்களுக்குச் சரியான வரவேற்பு இல்லை. சில விமரிச கர்கள் துப்பறியும் நாவல்கள், நாவல் இலக்கியம் என்ற பெய ரின் கீழ் வரத் தகுவன அன்று என்று வன்மையாகக் கண்டித்து எழுதுவர். ஆனால் அமெரிக்கர்கள் மட்டும் விடாப்பிடியாக இதைக் கட்டிக்கொண்டு அழுது வரு கின்றனர். இதற்கென மூன்று பெரிய அமெரிக்கப் பத்திரிகை கள் தனிப் பகுதிகள் ஒதுக்கி, புதிதாக வெளிவரும் துப்பறியும் நாவல்களுக்கு விமரிசனம் எழுதி வருகின்றன. 'கிரைம் கிளப் வால்யூம்' (Crime Club Volume) என்ற புத்தக வெளியீட்டு வரிசையில் துப்பறியும் நாவல் களே வெளிவருகின்றன.

நுண்ணியல் அறிஞர்களும் இலக்கிய மேதைகளும் இந் நாவல்களிடம் ஈடுபாடு காட்டுவ தில்லை. நடுத்தர மக்களிற் சிலரும் மூன்றும் தரப் பேர்வழிகளும் இவற்றை மிக விரும்பிப் படிக் கின்றனர். இவற்றில் காணப் படும் திடீர் பயங்கா நிகழ்ச்சி களில் வியந்து, 'மாசிக்' போக் கிலே மயங்கி, போலி மகிழ்ச்சி யிலே திளைத்து, பொழுது போக்குக்காகப் படித்து வரு கின்றனர். அமெரிக்க வெளி யீட்டாளர்கள் இவர்களின் நிலை யைப் பயன்படுத்திப் பெரு ஊதியம் திரட்டுகின்றனர். துப் பறியும் நாவல்கள் எழுதும் ஆசிரியர்களும் நிலையான இலக் கியப் புகழைக் குறிக்கோளாகக் கொண்டவர்கள் அல்லர்.

திரைப் படங்களில் சண்டைப் படத்திற்கு எந்த அளவு மதிப் பைக் கொடுக்கிறோமோ அந்த அளவு மதிப்பையே இந்தத் துப்பறியும் நாவல்களும் பெறு கின்றன.

தமிழ்நாட்டில் வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி முதலியார் ஆகியோர் மேனாட்டுத் துப்பறியும் நாவல் களைப் படித்து இங்கும் அவை போல் ஆக்க முற்பட்டனர். அவர்களது நாவலிலே வரும் துப்பறியும் மகாவீரர்கள் 'சூராதி சூரர்' களாகவும், 'சகல கலா விற்பன்னர்' களாகவும், 'ஸ்டண்ட்' வேலைகள் செய்ப வர்களாயும் இருக்கின்றனர். சந் தர்ப்பங்கள் அவர்களுக்கேற்ற படி வளைத்துத் திரிக்கப் பட்டனவேயொழிய அவர்கள்

சந்தர்ப்பங்களுக்கு ஏற்றபடி வளைந்துகொடுக்கவில்லை. துப்பறிபவனுக்கு எவ்வளவு திறமை இருக்க முடியுமோ அதை விடப் பன்மடங்கு திறமை துப்பறியப் படுகிறவர்களிடம் இருக்க முடியும் என்பதை ஆசிரியர்கள் மறந்து விட்டனர். நிகழ்ச்சிகள் பொருந்திச் சங்கிலித் தொடர் போல் நீள வேண்டும். துப்பறிபவனோடு உலகத்தை அமைத்துக் கொண்டு விடாமல் அவ்வீரனுக்கேற்பக் கதையையும் நிகழ்ச்சிகளையும் திரித்து அமைத்து விடாமல் ஆசிரியன் கருத்தோடு கதையைநடத்தி செல்வானயின், துப்பறியும் நாவல்கள் ஓரளவு வெற்றி பெற்றனவாகக் கருதப் படும். இவை போன்ற குறைபாடுகளால் தமிழ்நாட்டில் மட்டுமின்றி மேனடுகளிலும் துப்பறியும் நாவல்கள் சிறப்பிழந்தன.

'டப் டப்' என்ற சப்தத்தோடு முதல் அத்தியாயம் தொடங்கும்; சுட்டவனின் கைக்குச் சங்கிலி மாட்டுவதோடு இறுதி அத்தியாயம் முடியும். முதல் அத்தியாயத்திலேயே போட்ட புதிர் இறுதி அத்தியாயத்திலே விடுவிக்கப்படும். துப்பறியும் நாவலை ஒரு விடுகதைக்கு மேலாக, போலீஸ் இலாகாவின் அறிக்கைக்கு உயர்ந்ததாக மதிப்பிட முடியவில்லை.

ஆனல் இற்றைய நாளில் வெளிவரும் சில துப்பறியும் நாவல்கள் சிறிது பாராட்டைப் பெறும் முறையில் அமைந்திருக்கின்றன. வரவரச் சிறிது முன்னேற்றம் பெற்றுவருகின்றன. விஞ்ஞான வளர்ச்சியால் மாற்றமடைந்த நாகரிக வளர்ச்சிக்கேற்பத் துப்பறியும் வீரர்களை உண்டாக்கிப் பொருந்துமாறு சில அமெரிக்க ஆசிரியர்கள் எழுதி வருகின்றனர்.

துப்பறியும் நாவல்களைத் தோற்றுவித்து முன்மாதிரியாக எழுதிக் காட்டியவர் எட்கார் அலன் போ (Edgar Allan Poe) என்னும் அமெரிக்கராவர். இவர் 1809-ம் ஆண்டு பிறந்து 1849-ம் ஆண்டைத் தம் வாழ்நாளின் இறுதி ஆண்டாகப் பெற்றார். அமெரிக்கக் கவிஞர்களிலே குறிப்பிடத்தக்க ஒருவராக இவர் கருதப்படுகிறார். கதைகள் பலவும் இவர் எழுதியிருக்கிறார். துப்பறியும் நாவல் எழுதி முன்மாதிரி காட்டினர். இவரது தந்தையும் தாயும் திரைப்பட நடிகர்களாவர்.

தெளிவாகவும் முழு உருவுடனும் எழுதிக் காட்டியவர் அலன் போ ஆயினும், இவருக்கு முன்னமேயே பிரஞ்சு நாட்டில் இத்தகைய நாவல்கள் சில தோற்றம் பெற்றன. விடோஹ் (Vidocq) என்னும் பிரஞ்சு நாவலாசிரியர் துப்பறியும் நாவலொன்றை ஆக்கினர். விடோஹ் 1715 ம் ஆண்டு பிறந்து 62 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார். இளமைக் காலத்தே பிரஞ்சுப் படையில் வேலைபார்த்து, அங்கு சட்ட வரம்புக்கு மீறித் திரிந்த சில காரணங்களால் இவர் சிறை

வைக்கப்பட்டார். சிறையி லிருந்து இவர் இரண்டு முறை தப்பியோடிப் பிடிபட்டார். சிறைவாழ்க்கையில் இவர் குற்ற வாளிகளோடு பழகும் வாய்ப்பும் தப்பியோடும் முறைகளையும் அறியும் வகையும் கிடைத்தன. விடுதலைக்குப் பின் பாரிஸ் கொள்ளைக்காரர்கள் சிலருடன் உறவாடினார். பின்னர் அரசியா லாருக்கு உறுதுணையாக நின்று குற்றவாளிகளைப் பிடித்துக் கொடுக்கத் துணைசெய்தார். பாரிஸ் காவல் துறையில் வேலை பெற்று அவ்வேலையைத் திறம் படச் செய்துகாட்டினார். இப் படி அனுபவமிக்க அவரது வாழ்க்கை அவரது நூல்களுக் குத் துணைபுரிந்திருக்கக்கூடும். இவரது நூல்களில் சிறை வாழ்க்கை, சிறைத் துன்பம், கொள்ளைக்காரர்களின் முறைகள் துப்பறியும் முறை முதலியன, தெளிவாக விவரிக்கப்பட்டன. இதனால் இவரது நூல், விக்டர் ஹியுகோ, எழுதிய 'ஏழை படும் பாட்டி' ற்கு துணைபுரிந்திருக்கக் கூடும் என விமரிசகர்கள் கருது கின்றனர். எனினும் இவரது பெயரால் வெளிவந்த நூல்கள் அனைத்தும் இவரால் எழுதப் பட்டவைதாமா என்ற ஒரு பெரும் ஐயம் உள்ளது.

1860,70-ம் ஆண்டுகளில் பிரான்ஸில் எமில் காபோரியன் என்பவர் இம்மாதிரி நாவல்களை எழுதினார். அவருடைய வழி யில் ஜார்ஜ் சிமோனன் (George Simenon) என்பவர் முன்னேறிப் புகழ்பெற்றார்.

எட்கார் அலன்போ தொட் டுத் தொடங்கிய இந் நாவலினத் தில் சரியான வளர்ச்சியைக் காட்டியவர் அவருக்குப் பின் தோன்றிய சர் ஆர்தர் கனோன் டாயில் (Sir Arthur Canon Doyle) என்பவராவர். அலன்போ எழுப்பிவைத்தது மாளிகை யாயின், கனோன் டாயில் அதற்கு அழகானதொரு வாயில் அமைத் தவராவர். கனோன் டாயில் எழுதிய "சேர்லக் ஹோம்ஸ்" என்ற நூல் இவ்வகையில் சிறந்ததாகக் கருதப்படும். புதிது புதிதாய் நாவல்களும் ஆசிரியர்களும் ஏற்பட்ட பின்ன ரும் 'சேர்லக்ஹோம்ஸ்' இன் னும் பழமை பெறுமல் இருந்து வருகிறது. துப்பறியும் நாவல் ரஸிகர்கள் இன்னும் விருப்பத் துடனும் உவகையுடனும் இந் நூலைப் படிக்கக் காண்கின்றோம்.

ஆர்தர் கானோன் டாயில் 1859-ம் ஆண்டு பிறந்தார். டாக் டர் வேலைக்குப் படித்து எழுத் தாளராகத் திகழ்ந்தார். இவர் பல சிறு கதைகளும் நாவல்களும் எழுதியுள்ளார். ஸ்ட்ராண்ட் (Strand) என்னும் திங்களிதழில் இவருடைய துப்பறியும் நூலான சேர்லக்ஹோம்ஸ் தொடர்ந்து வெளிவந்தது. 1902 ம் ஆண்டு இவருக்கு 'சர்' பட்டம் வழங்கப் பட்டது.

இப்பொழுது இத்துறையில் பெயரோடு விளங்குபவர்களில் ஓபன் ஹீம் (Oppenheim), அகஸ் தாகிறிஸ்டி (Agastha Christie) ஆகியோர் குறிப்பிடத்தக்க வர்கள்.

புதையல்

சோம. மகாதேவன்

அட்டைப்படக்கதை

அமைதியைக் காண வாழ்வின் எல்லைக்குப் போகவேண்டிய நிலையில் இருந்தான் செல்லையா. அவனது சிந்தனையில் சுழலிட்டுக் கொண்டிருந்த எண்ணக் குமிழிகள் எந்த முடிவுக்கும் வராமல் இடையிலேயே உடைந்தவண்ணமிருந்தன!

அடுத்து அடியெடுத்து வைக்கப்போகும் இருண்ட வாழ்வின் அதிர்ச்சிக்கு மத்தியில், தனிமை சூழ்ந்த மணல்பரப்பின் மீது அவன் பிரமை பிடித்தவனைப்போன்று சாய்ந்து கிடந்தான். கூப்பிடு தூரத்திலே அவனதுதோழர்கள் மீன்பிடிக்க, கடலின்மீது தங்கள் பிரயாணத்தைத் தொடங்க ஆயத்தப்படுத்தும் ஆரவாரம் கேட்டுக்கொண்டிருந்தது. அவர்களுடன் போக வேண்டியவன்தான் செல்லையாவும். ஆனால் அன்று அவன் மனம் தனிமையை நாடியது.

கடலிலே கட்டுமரங்களைத் தள்ளிக்கொண்டிருக்கும் நண்பர்கள் கூட இன்று அவனைப் பற்றித்தான் பேசிக்கொள்வார்கள். 'பைத்தியக்காரன் எங்கோ போய்விட்டான்' என்றுதான் எண்ணுவார்கள். 'பணப் பித்துப் பிடித்தவன்' என்றுகூட எள்ளி நகையாடுவார்கள். எவ்வளவோ காலமாக—அவனது இதயத் துடிப்பிலே கலந்து உள்ளேயே குறுகுறுத்துக் கொண்டிருக்கும் கனவுகளைப்பற்றி அவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது?

அவனை அறிந்தவர்கள்—அவனது உள்ளத்தைத் தெரிந்தவர்கள்கூட அவனைப் 'பைத்தியம்' என்றுதானே கூறுகிறார்கள். ஆனால் அவளுக்குத் தெரியும் அவனைப்பற்றி—அவனது லட்சியக்கனவுகளைப்பற்றி! அவனைப் 'பைத்தியம்' என்று ஊரிலே கூறியபோது அவள்மட்டும் பதறினாள். அழுதாள். 'அவர் பைத்தியம் இல்லை!' என்று துணிந்து கூறினாள். ஆனால் அவள் வார்த்தைகளைக் கேட்கப் போவது யார்? செல்லையாவின் போக்கு அவன் பித்தன் என்பதை எடுத்துக் காட்டுகிறதே!

ஆனால் இன்று...? அவனது நீங்காத நினைவுகள் காட்டிய எல்லைக்கோட்டைத் தொட்டுவிட்டபோது...?

அவனது சிந்தனைகள் பெருமூச்சுகளாக மாறுதலடைந்து உடலை அசைத்தன.

அவனுக்கு மட்டுமல்ல! எல்லோருக்கும் தெரியும், விடிந்தால் ஜோதிக்குத் திருமண

மென்று! கிராமத்திலே இன்று பூராவும் இதைபபற்றித் தானே பேசுகிறார்கள். இதுமட்டுமா? 'செல்லையா பைத்தியமான கதையை' இன்னும் கொஞ்ச நாள் வரையிலும் பேசிப் பேசி மகிழத்தான் போகிறார்கள்!

தலைக்குமேல் பறந்து சென்ற ஆந்தையின் அலறல் நிசப்தத்திலே சலனத்தை உண்டு பண்ணியது.

அவன் திரும்பினான்.

இந்த வையகத்தைக் கண்டு நகைத்தவாறு, தனது குளிர்ந்த கதிர்களைக் கடல் அன்னையின் மீது அள்ளித் தெளித்துக் கொண்டிருந்த நிலவின் ஒளியிலே—அவனது கண்கள் அந்த மலர் முகத்தைத் தேடின! பொங்கிய கடல் அலையொன்று மணல் சரிவின் மேலெழுந்து அவனது கால்களைத் தொட்டுத் திரும்பி உயிரற்று இறுகிய மணலுக்குள் மறைந்தது!

குளிர்ந்த உணர்ச்சி நரம்புகளில் ஓடியது. அவன் கால்களை இழுத்துக்கொண்டான். ஏக்கப் பெருமூச்சில் வெளியேறிய வெப்பக் காற்று குளிர்ந்த தென்றலுடன் கலந்தது. அவன் நெற்றியை விரல்களால் அழுத்திக்கொண்டான்.

இனி அவனது இன்பக் கனவுகளை யார் கேட்கப்போகிறார்கள்? 'ஜோதி' மறைந்துவிட்டால்... இனி யார் அவனுக்காகப் பரிந்து பேசி இரக்கப்படப் போகிறார்கள்? இனி இதயத்திலே இருள் சூழ்ந்துவிடும். ஆறுதலடைய இடமேது?

செல்லையா முகத்தில் கலைந்து விழுந்த தலைமயிரை ஒதுக்கி விட்டுக்கொண்டான். விரல்கள் நடுங்கின. குளிர்ந்த வாடைக் காற்று அவனைத் தழுவிச் சென்று வாலிப இரத்தத்தில் முறுக்கேற்றியது.

அவனது உள்ளத்தில் புதையோடிப்போயிருந்த அந்த எண்ணக்குவியல் நீர்க்குமிழிபோல் மேலே கிளம்பியது.

இந்த முடிவைக் காண்பதற்கோ அவன் இவ்வளவு நாளும் உழைத்தான்? கண்ட கனவெல்லாம் வெறுங் கானலா? அவனைப் பித்தனாக்கிய அந்த 'நம்பிக்கை' அவனுடன் அழிந்துவிடவேண்டியதுதானா?

கேள்வி வேகத்தில் அவனது உள்ளமும், உடலும் ஒருங்கே அசைந்தன. குளிரினால் துவண்டிருந்த உள்ளங்கையைத் தேய்த்துக்கொண்டான். சூடு ஏறியது. இரத்த வேகத்திலே மனம் மறுப்பளித்தது!

'ஏன் இன்றுகூட அவனது உழைப்பிற்குப் பலன் கிடைக்க முடியாதா? அவன் பைத்தியமல்ல என்பதை எல்லோருக்கும் எடுத்துக்காட்ட முடியாதா?'

எந்த முடிவுக்கும் வராமல் சிறிது நேரம் கழிந்தது. இந்தப் போராட்டத்தில் வைராக்கியம் வளர்ந்தது.

"முடியும்!" என்று முணுமுணுத்தன உலர்ந்த உதடுகள். வேதக்கோவிலின் பெரியமணி—ஒலிபரப்ப ஆரம்பித்தது. ஒலி அலைகள் அவனது சிந்தனையில் மோதிக்கொண்டே இருந்தன.

அவன் அதிகநேரம் தாமதிக்க வில்லை; எழுந்தான்; முடிவைக் கண்டவை போல் கால்கள் நடந்தன.

* * *

பத்து ஆண்டுகளுக்கு முன்னுல் அமைதி நிறைந்த இந்தக் கடற்கரை மணல் பரப்பிலே செல்லையாவும் ஜோதியும் ஒன்ருக ஓடியாடித் திரிந்தார்கள். இரண்டு இளம் உள்ளங்களையும் பற்றியிருந்த மாசற்ற அன்பை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டிருந்த காலத்தில் தான் செல்லையாவின் பிஞ்சு உள்ளத்திலே இந்த 'இருள்' கவிழ்ந்தது.

இப்பொழுது ஜோதி நினைத்து அழும் இந்த 'மன இருள்' அவனுக்கு அவள் விளையாட்டுப் பொருளாகக் கொடுத்த பரிசு!

சிறுமியாக இருக்கும்போதே ஜோதி துடுக்கானவள். அந்தக் காலத்தில்—அவள் பேசுவதைக் கேட்க வயதானவர்கள் கூடப் பிரியப்படுவதுண்டு! ஆனுல் செல்லையாதான் அவளுக்கு உயிர்த்தோழன். அவள்—அவனை விட அதிகமாக உலகத்தைத் தெரிந்துகொள்ளும் பாவனையில் பேசிக்கொண்டே இருப்பாள். தன்னை மறந்து அவன் கேட்டுக் கொண்டிருப்பான். கதைகள் சொல்லுவாள். அவன் கவனத்



துடன் கேட்பான். அந்த இளம் பிராயத்தில் இருவருக்கும் இது இன்பப் பொழுதுபோக்கு!

அன்றும் அவள் கதைதான் சொன்னாள்!

பசுமை ததும்பும் மரத்தைப் போன்ற அவனது மனதில் எழுந்த ‘பெரிய கேள்வி’க்கு அவள் பதிலளிக்க முயற்சித்தாள்.

“ஜோதி! உங்கப்பா நிறையப் பணம் வச்சிருக்காரே! பெரிய படகுகூட இருக்கிறதே! இதெல்லாம் எப்படி வந்திச்சு? எங்கப்பாவுக்குமட்டும் ஏன் இல்லே?” என்று ஒரு நாள் செல்லையா கேட்டான் அவளிடம்.

அவளுக்கு விளங்காத புதிராக இருந்தது கேள்வி! தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லை. அவள் புத்திசாலி! யோசித்துப் பதில் சொன்னாள்.

“நீதான்...என்னைக் கட்டிக்கப்போறியே...எங்கப்பா கிட்ட இருக்கிற பணம் பூராவும் உனக்குத்தான்!” என்றாள் அவள் கன்னங்கள் குழிய.

இந்தப் பதிலினால் செல்லையாவின் மனம் சமாதானமடையவில்லே. அவனது தந்தை கூறியிருந்த புத்திமதிகளையும்—ஜோதியின் வார்த்தைகளையும் எடைபோட்டுப் பார்த்தது அவன் குழந்தையுள்ளம்!

“உன்னேமட்டும் பணக்காரின்னு சொல்றாரே, அப்பா! நீமட்டும் ஏன் பணக்காரியா இருக்கே!” திரும்பவும் கேட்டான் அவன்.

ஜோதி உதட்டைக் கடித்துக்கொண்டாள். அவளது அறிவுக்கு அப்பாற்பட்ட விஷயமாக இருந்தது இது. அவளும் அதே கேள்வியைத்தான் திருப்பினாள்.

“நீயும் பணக்காரனா மாறிட்டா என்ன?”

“முடியுமா.....எப்படி முடியும்?” என்றான் அவன்.

“முடியுமே!” என்றாள் ஜோதி அவனது ஆவலை அழிக்க நினைக்காமல்.

“சொல்லேன்!” என்றான் செல்லையா பரபரப்புடன். இந்த வழியை அறிந்துகொள்ள அவனுக்கு ஆவல்.

ஜோதி யோசித்துக்கொண்டே இருந்தாள். அவள் பாட்டி சொன்ன கதைதான் அவளது ஞாபகத்திற்கு வந்தது.

“நான் ஒரு கதை சொல்லப் போறேன், கேட்கிறாயா?”

“கதையா?”

“எப்படிப் பணக்காரனாகுறதுங்கிறதுக்கு எங்க பாட்டி சொன்ன கதைசொல்லட்டுமா?”

அவன் ஆவலுடன் தலையசைத்தான். அவள் மணலில் நன்றாகச் சாய்ந்து கொண்டாள்.

“ஒரு ராஜா இருந்தாராம். அவருக்கு ஒரு ராஜகுமாரி!”

“அவள் உன்னைப்போல அழகா இருந்தாளா?” குறும்புத்தனமாகக் குறுக்கிட்டான் செல்லையா.

அவள் சிரித்துக்கொண்டே தொடர்ந்தாள்.

“ஒருநாள்...ராஜகுமாரி கடற்கரைக்கு உலாவ வந்தப்போ—

அங்கே வலே வீசிக்கிட்டிருந்த செப்படவனைப் பார்த்து அவனையே கட்டிக்கணும்னு ஆசைப்பட்டாளாம். அவனும் அப்படித்தான் !''

"அப்புறம் ?'' என்றான் செல்லேயா அவசரமாக.

"ராஜகுமாரியை ஒரு ஏழைக்குக் கல்யாணம் செய்துகொடுக்க யாராவது சம்மதிப்பாங்களா ?''

"இது நல்லாவே யில்லே!" என்று அலுத்துக்கொண்டான் செல்லேயா.

"முடிக்கிறதுக்குள்ளேயே முந்திக்கிறியே! அந்தச் செம்படவனுக்குத்தான் ராஜகுமாரியைக் கல்யாணம் கட்டிக்கொடுத்தார் ராஜா !''

"ஏழைக்கு ராஜாதான் கல்யாணம் செய்துகொடுக்க மாட்டாரே !'' அவன் ஆச்சரியத்தோடு கேட்டான்.

"செம்படவன் கடலிலே வலே வீசுறப்போ...பெரிய புதையல் கிடைச்சதாம்! அதைக் கொடுத்து அவன் ராஜகுமாரியைக் கல்யாணம் செய்துக்கிட்டான் !''

"கடலிலேயிருந்து புதையல் கிடைக்குமா ?''—ஆவலும், ஆர்வமும் ததும்பின அவன்வார்த்தைகளில்.

ஜோதி சிரித்தபடி "நீ சோம்பேறியா இருந்தா உனக்கெப்படிக் கிடைக்கும் !'' என்று சொல்லிக்கொண்டேகிராமத்தை நோக்கி ஓடினுள். அவள் உருவம் மறையும்வரை இமையாது பார்த்துக்கொண்டிருந்தான் செல்லேயா !

அந்த மோகினியைப் பின் தொடர்ந்து சென்ற...சிந்தனைச் சோர்வையின் மத்தியிலே அவனது உள்ளத்தில் அந்த 'நம்பிக்கை வித்து' விழுந்தது. அது வைரம் பாய்ந்த மாமாவதற்குத் தான் இந்த ஐந்து வருடகாலம்!

அன்றிலிருந்து சோம்பேறியாகத் திரிந்த செல்லேயாவின் வாழ்விலே புதிய மாறுதலேக் கண்டனர் எல்லோரும் !

வழக்கமாக அவனும் கட்டுமரம் ஏறித் தனது கடல்பிரயாணத்தைத் தொடங்கினுன். சோர்வின்றி வலே வீசினுன். கடலிலே தான் பாதிப்பொழுது கழிந்தது. அவனது உடல் உரம்பெற்ற காலத்திலும் கூட ஜோதியின் வெள்ளே யுள்ளத்தினின்றும் எழும்·கேலிப் பேச்சுக்கள், அவனது நினேவில் ஊறிக் கொண்டிருந்த 'நம்பிக்கை'யை வளர்த்தே வந்தன !

இளந் தென்றலின் குளுமையிலே—தனக்கு முன்னுல் அமர்ந்து வலே பின்னிக்கொண்டிருக்கும் ஜோதியை இமையாது பார்த்துக் கொண்டிருப்பான் செல்லேயா.

அவளது கயல் விழிகளும் கருங்கடல் போல் நெளிந்தாடும் கூந்தலும், இடையிடையே ஏறிட்டுப் பார்க்கும்போது மின்னிடும் முத்துப் பற்களும், சிவந்த சிப்பிபோல் குழிந்து சிவக்கும் கன்னங்களும் அவனே இன்பப் போதையில் மூழ்கச் செய்யும் !

"ஜோதி ! நீ ராஜகுமாரி தானே !'' என்பான் செல்லேயா!

அவள் இமைகள் படபடக்க அவனைப் பார்த்துச் சிரிப்பாள்.

"இந்த ராஜகுமாரி உனக்குத் தானே சொந்தம்!"

"இப்போதேயா?"

"பின்ன எப்போது!" அவளுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது அவனது மனம்!

"நானும் ராஜகுமாரனாக வேண்டாமா?"

அவனது ஆர்வத்தைக் கண்டு அவளது மதிமுகம் நாணத்தால் சிவந்துவிடும்; மெல்லிய புன்னகை உதட்டோரம் நெளியும். இதைக் கண்டு அவன் இந்த உலகத்தையே மறந்துவிடுவான்!

"ஜோதி உனக்காகத்தான் வலை வீசுகிறேன். புதையல் கிடைத்தவுடன் மாமாவுக்கே கொடுக்கப்போகிறேன். எல்லாம் உனக்காகத்தான்!"

அப்பொழுது அவளுக்கு இது விளையாட்டாகத்தான் இருந்தது.

"கடலிலே புதையல் கிடைக்குமா?"

"கட்டாயம் கிடைக்கும்! நீ வேண்டுமானால் பாரேன்!" காற்றில் கருநாகம்போல் அசைந்தாடும் அவளது கூந்தலை அன்போடு ஒதுக்கிவிடுவான்.

இதற்குமேல் அவள் ஒன்றும் பேசமாட்டாள். தன் பொருட்டு அவன் வருந்தி உழைப்பதில் அவளுக்கு ஒரு திருப்தி; 'உற்சாகத்துடன் உழைத்தால் பணம் சேர்க்க முடியாதா?' என்ற எண்ணமும் உண்டு.

இப்படி எத்தனையோ சந்திப்புகள்!

செல்லையாவின் மனதில் நம்பிக்கையும் காதலும் சேர்ந்தே வளர்ந்தன.

சலியாது உழைத்தான். எல்லோருக்கும் பின்னால்தான் அவனது கட்டுமரம் கரைசேரும். கட்டுமரம் ததும்பத் துள்ளிக் குதிக்கும் மீன்களைக் கண்ட போது—செல்லையாவின் தந்தை—தன் மகனை மகிழ்வுடன் தழுவிக் கொள்வார். ஆனால் அவனுக்கு இந்த மீன்களைக் கண்டதும் மகிழ்ச்சி உதயமாகுமா? அவன் எதிர்பார்த்தது வேறு! அவனது லட்சியம் வேறு!

மகன் பித்தனாகி வருவதைக் கண்ட தந்தை கண்ணீர் வடித்தார்; காரணம் அறிய முடியாமல் கலங்கினார். அவன் யாரிடமும் எதையும் பேசவில்லை; பேச விரும்பவில்லை.

அவன் உழைத்தான், தவறாது வலை வீசினான்; திரும்பும்போது வழக்கம்போல் சோர்வுதான்! ஆனால் மறுநாள் புறப்படும் போது புதிய உற்சாகம்! இந்தச் சீட்டாட்டத்தில் அவனுக்குத் தனி ருசி ஏற்பட்டுவிட்டது. ஜோதியின்மீது கொண்டுள்ள 'காதல்' இந்த ஆசை வெறிக்குத் தூண்டுகோலாக இருந்தது.

ஜோதிக்கு மட்டும்தான் தெரியும் அவனைப்பற்றி! ஊரிலே செல்லையாவுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாக எல்லோரும் பேசிக்கொண்டபோது அவள் பதறினாள். அவள் உரமிட்டு வளர்த்த அந்தமனப்பிராந்தியை நீக்க வழியறியாது மயங்கினாள்.

"அத்தான் உங்களை எல்லோரும் பைத்தியம் என்கிறார்களே! உங்கள் காதில் விழவில்லையா? வாழ்நாள் பூராவும் வலை வீசினாலும் புதையல் கிடைக்குமா? என்னைப் பாருங்கள்...நான் இருக்கிறேனே உங்கள் பக்கத்தில்! பின் எதற்காக இந்த ஏக்கம்!"

"ஏக்கமல்ல ஜோதி! எனது லட்சியம்!"

"இந்த லட்சியம் எதற்காக?"

"உனக்காகத்தான்!"

"எனக்காக நீங்கள் ஏக்கத்தினால் உயிர்விட வேண்டுமா?" ரோஜா இதழில் பனித்துளிகள் சிதறிக் கிடப்பது போன்று அவளது வெளிரிய கன்னங்களில் கண்ணீர்த்துளிகள் பரவிக் கிடந்தன. வலைவீசி மரத்துப் போன விரல்களால் அவளது கண்ணீரைத் துடைத்தான் செல்லையா.

"ஜோதி! என்மீது உனக்கு நம்பிக்கையில்லையா?"

நீரினால் நனைந்த இமைகள் படபடக்க அவனை நிமிர்ந்து நோக்கினாள் ஜோதி.

"நம்பிக்கை இருந்தது...!"

"இப்போது இல்லையா?"

அவள் அழுதாள்!

"அத்தான் உங்களைப் பற்றியே உங்களுக்குத் தெரியவில்லையா?"

"ஜோதி! எனக்கு நம்பிக்கையுண்டு, உன்னை வாழ்விக்க!"

"அதற்கு இதுதானா வழி?" அவள் அலுத்துப்போனாள்.

"கடல் அன்னை இந்த ஏழையைக் கைவிடமாட்டாள் ஜோதி!"

உள்ளத்திலே கொந்தளிக்கும் புயலை அடக்கமுடியாமல் அழுதாள். அவன் அவளை அன்போடு அணைத்துக்கொண்டான். ஆனால் அந்த நம்பிக்கை அவன் மனதில் மங்காது பொங்கிக் கொண்டுதானிருந்தது! இதை அணைக்க அந்த மோகினியால் முடியவில்லை! அவன் பித்தனாகவே இருந்தான். இந்தப் பைத்தியத்துக்கு பெண் கொடுக்க ஜோதியின் தந்தை சம்மதிக்கவில்லை. பின் ஜோதியின் திருமணத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

அவள் வெளியிட்டுக் கூற முடியாத மனப்போராட்டத்தில் சிக்கிச் சுருண்டு கிடந்தாள். வலைக்குள் அகப்பட்டமீன்போல் அவளது உள்ளம் தத்தளித்துக் கொண்டிருந்தது!

ஆனால்......அவன்?

* * *

அவன் விரைவாக நடந்து கொண்டிருந்தான். அவனது தோளிலே பெரிய வலைசுருண்டு கிடந்தது. மற்ற நினைவுகளுக்கு இடங்கொடுக்காத வகையில் அவன் மனம் லயித்திருந்தது, கடைசி முயற்சியில்!

திரும்பும்போது அவன் பித்தனாக இருக்கமாட்டான்! வெற்றி வீரனாக இருப்பான். அவனைப் 'பைத்தியம்' என்று சொன்ன

வர்கள் போற்றுவார்கள்! புகழப் போகிறார்கள்!

அவனது நடையிலே புதிய தெம்பு இருந்தது. பாதையின் பக்கத்தில் இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பரவி இருந்த பனைமரங்களின் காய்ந்த ஓலைகள் காற்றில் இரைச்சலிட்டுக் கொண்டிருந்தன. மேகக்கூட்டங்களின் தொல்லையின்றி வான வீதியில் முழுமதி உச்சியை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான்.

இயற்கை அவனது கவனத்தைக் கவரவில்லை. அவன் கட்டுமரத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தான். எதிர்ப்பின்றி அவன் போக்கிலே மனமும் மயங்கிக் கிடந்தது.

"அத்தான்!" என்ற இனிய குரல் கேட்டபோது அவனது கால்கள் செயலற்று நின்றுவிட்டன! அவன் திரும்பினான்.

மெல்லிய மேலாடை இளந் தென்றலில் அசைந்தாட ஜோதி வந்துகொண்டிருந்தாள். அவனது துள்ளிய நடையைத் தொடர்ந்துவந்த அவள் எத்தனை தடவை "அத்தான்!" என்று அழைத்து அலுப்புற்றாளோ?

"ஜோதி!" என்றான் அவன், அருகில் நெருங்கியதும்.

அவள் 'முக்காட்'டை விலக்கினாள். நிலவின் ஒளியில்கூட இயற்கைக்கு மாறாகச் சிவந்திருந்த அவளது எழில் முகம் நன்றாகத் தெரிந்தது. அவனது உள்ளத்திலே ஒரு குறுகுறுப்பு! ஆண்மையின் பிடிப்பிலே உலர்ந்த உதடுகள் துடித்தன.

தோளிலிருந்து சரிந்த வலையை அவன் நன்றாகத் தூக்கிப் போட்டுக்கொண்டான்.

உள்ளத் துடிப்போடு அவனையே இமையாது பார்த்துக் கொண்டிருந்த அவள் பேசினாள். குவிந்த அதரங்கள் கருத்து நிறைந்த கவிதைகளாக மாறின.

"என் மனதை அறிந்து கொள்ள முடியாதவர்களுக்கு மத்தியில் என்னைத் தவிக்க விட்டு இந்நேரத்திலே நீங்கள் வலைவீச வேண்டுமா?"

அவள் குமுறினாள்.

வலிய கரங்கள் அவளது தலையை மார்போடு அணைத்துக் கொண்டன.

"விடிவதற்குள் வந்துவிடுவேன், ஜோதி!" என்றான் அவன்.

அவனது இறுகிய தோள்களை இரு கைகளாலும் பற்றிக் கொண்டு அவள் அழுதாள்.

"வாருங்கள் அத்தான், இந்தக் கடற்கரை வழியே நடந்து கொண்டே போவோம்! உயிர் இருக்கும் வரையிலும் நடப்போம்! என்னைத் தனியே விடாதீர்கள், அத்தான்!"

"ஜோதி! எனக்கு நம்பிக்கை இருக்கிறது. விடிவதற்குள் வந்துவிடுவேன் உன்னை அழைத்துச் செல்ல! உனக்காகத்தான்!"

"எனக்காக ஒன்றுமே வேண்டாம் அத்தான்! ஐயையோ! இந்தக் கடைசி நேரத்திலுமா இந்தப் பேச்சு? உங்களை விட்டுப் பிரியமாட்டேன். என்னையும் அழைத்துச் செல்லுங்கள்!"

அவள் பொருமினாள். அவளது துவண்ட உடலை அவன் தாங்கிப் பிடித்துக்கொண்டான்.

"ஜோதி! இதுதான் கடைசி! விடிவதற்குள் வந்துவிடுவேன்!" அவளது பிடியிலிருந்து அவன் விலகினான். அவள் அழுதாள்; "அத்தான்" என்றாள். உள்ளத்தில் நிறைந்திருந்த சுமையில் உடம்பு நடுங்கியது!

"அழாதே ஜோதி! நீயுமா என்னைப் 'பைத்தியம்' என்று எண்ணுகிறாய்? நான் உனக்காகத்தானே உயிரோடிருக்கிறேன். நீ இல்லாவிட்டால் என்னுடன் பேச வேறு யார் இருக்கிறார்கள்! இன்றுதானே கடைசி! விடிவதற்குள் வந்துவிடுவேன் ஜோதி!"

அவன் இரண்டடி நடந்தான்.

"அத்தான்" என்றாள் அவள் அழுகை கலந்து.

அவன் நின்று திரும்பினான். ஆனால் தாமதிக்கவில்லை. ஆவல் உந்தியது. வழக்கமான 'சிட்டாட்ட'த்தின் ருசியில் அவன் வேகமாக நடந்தான்.

அவன் நடந்து செல்வதையே சிலை போல் பார்த்துக்கொண்டிருந்தாள் ஜோதி.

கட்டவிழ்த்த கட்டுமரத்தினுள் வலையை எறிந்துவிட்டு அதை வேகமாகக் கடலுக்குள் தள்ளினான் செல்லையா. வலிய கரங்கள் துடுப்புக்களை ஏந்தின. எதிரே சீறிப் பாயும் அலைகளைக் கிழித்துக்கொண்டு முன்னால் பாய்ந்தது படகு.

ஜோதியின் கண்களுக்கு அவன் உருவம் சிறிதாகத் தெரிந்தது. ஆடைகள் உடலின் மீது படிந்து காற்றில் படபடத்துக் கொண்டிருந்தன. எதிரே விரிந்துகிடந்த நீர்ப்பரப்பில் கண்கள் பதிந்திருந்தன. அவளது மெல்லிய கன்னங்களில் தடமிட்ட கண்ணீர் கீழே சிதறி வறண்ட குறுமணலில் கோலமிட்டது.

* * *

பொங்கும் கடலுக்கு மத்தியிலே அவன் வலை வீசிக்கொண்டிருந்தான். விம்மித் தணியும் அலைகளின் மீது பரந்து விழுந்தது வலை.

சந்திரனின் குளிர்ந்த கிரணங்களுடன் விளையாடிக்கொண்டிருந்த மீன்கள் அவனது வலையில் அகப்பட்டுத் தத்தளித்தன. அவன் சோர்வின்றி வலை வீசிக்கொண்டிருந்தான்; அந்த வெறிக்கு அவன் அடிமையாகிவிட்டான்!

கட்டுமரம் நிறைந்து தலை சாய்ந்தது மீன்களின் சுமையில். விரிந்த வலை சுருளும்; கயிற்றை இழுப்பான். கரங்கள் கனத்தைக் கணக்குப் பார்க்கும். வலை நீர் மட்டத்துக்கு மேல் வரும் வரையிலும் சிந்தனை எங்கோ மிதந்துவிடும். அலுப்போடு வலையை உதறுவான். அத்தனையும் மீன்கள். கரை சேர்ந்தால் அவ்வளவும் பணம்! ஆனால் அவனுக்கு அருவருப்பு! கோபத்தோடு துள்ளும் மீன்களை மறுபடி வெளியே தூக்கி எறிவான்—விடுதலை அடைந்த களிப்பில் அவைகள் ஓடி மறையும்! வெகு

நேரம் வரையிலும் அவைகளுக்கும் அவனுக்கும் இது மரண விளையாட்டாக இருந்தது!

ஈரம் உலர்வதுபோல் அவனது வெறி தணிந்துகொண்டே வந்தது. அவன் நிற்கும் சக்தியை இழந்து சாய்ந்து உட்கார்ந்தான். அயர்ந்த அவனுக்கு அலைகள் தாலாட்டின. அவனது காலடியில் சிறையுண்டிருந்த மீன்கள் விடுதலைக்காகத் தாவிக்கொண்டிருந்தன. தலைக்குமேல் உயர்ந்து தணிந்த அலையொன்று அவன் மீது உப்புநீரை வாரி இறைத்தது. அவன் திடுக்கிட்டு விழிப்படைந்தான். கிழக்கு வெளுக்க ஆரம்பித்திருந்தது. கட்டுமரம் கரையை நெருங்கிக்கொண்டிருந்தது. கரையிலே கடல் பறவைகளின் காலை ஆரவாரம் நிறைந்திருந்தது.

மடியிலே நனைந்துகிடந்த வலையை எடுத்துக்கொண்டு அவன் துடிப்புடன் எழுந்தான். 'ஜோதி' என்ற முணுமுணுப்பு அலைகளின் இரைச்சலுடன் கலந்தது.

கண்கள் அசைந்தாடும் நீரையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்க—வலை விரிந்து விழுந்தது. அடித்தளத்தில் மறைந்துகிடந்த ஆவல் மேலெழுந்தது. கண்ணிலே ஒளி! கரங்களில் புதிய பரபரப்பு! புதிய உணர்வுடன் உள்ளம் பொங்கியது!

பரப்பிய வலையைக் கடல் ஆழத்தினுள் விட்டுச் சுருக்கினான்; கயிறு விரைத்தது. இழுத்தபோது வலை கனத்தது. அவன் எதிர்பார்த்த—அறிந்திராத அனுபவம்!

மெய் சிலிர்த்தது! உடம்பிலிருந்த பலத்தையெல்லாம் ஒன்று திரட்டி வலையை இழுத்தான்.

'புதையல்' என்ற வார்த்தை அவனது உள்ளத்திலும், உதட்டிலும் நிறைந்திருந்தது.

அடிப்பாகத்திலிருந்து நீரின் மேல்தளத்துக்கு வந்துவிட்டது வலை. அது அளவுக்கு அதிகமாகக் கனத்தது.

மங்கிய இருளில், இரு கைகளாலும் ஏந்தி அதைக் கட்டுமரத்தினுள் தள்ளினான். குளிர்ந்த உணர்ச்சி அவனது உடலைக் குலுக்கியது! வலையைப் பிய்த்தான்.

அவன் வாழ்நாளில்—பெரும் பகுதியைச் செலவிட்டுத்தேடிய 'புதையல்' கிடைத்துவிட்டது அவனுக்கு!

அவனது மடியில் நீங்காத நித்திரையில் ஆழ்ந்து கிடந்த ஜோதியின் உடல் அவனுக்கு உணர்வை ஊட்டியது!

'ஜோதி' என்று அவன் அலறியது கடலையும் கடந்து கரையிலும் எதிரொலித்தது.

நமக்குள்ளே

சுகி

6

தனிமனிதனைப் போன்று ராஜ்யங்கள் அழிந்தாலும் அழிந்துவிடலாம்; அறிஞர்கள் சிந்தனை அழியக்கூடியதன்று; அவ்வாறே நாகரிகமும்!

* * *

நாகரிக உலகம் என்று சொல்லிக்கொள்ளும் இந்த உலகில் பத்துக்கு ஒன்பதுபேர் அநாகரிகமான, மிருகத்தனமான வாழ்வை நடத்துகிறார்கள். பசிக்கும் பட்டினிக்கும் எதிராக நின்றுபோர்புரிகிறார்கள். நாட்டில் செல்வம் கொழிக்கிறது; பணம் குவிகிறது ஒரு பக்கம்; மக்களோ ஏழைகள்; பணத்தில், அறிவில், நம்பிக்கையில், உணவில், உணர்ச்சியில்! பண்டைத் தமிழ்நாட்டில் நாகரிகம் இருந்த நிலைக்கும், இன்று இருக்கும் நிலைக்கும் உள்ள வித்தியாசம், தண்ணீருக்கும் நெருப்புக்குமுள்ள பாகுபாடு போன்றது. வாழ்க்கைப் பயிருக்குத் தண்ணீர் துணைநிற்கிறது. இன்றுவாழ்க்கைப்பயிரைநாகரிக நெருப்புப் பொசுக்குகிறது; ஒளி தருவதற்குப் பதில் ஒழிக்கப் பாடுபடுகிறது.

மக்களை மூன்று வகையெனக் கொள்ளலாம். மக்களில், பெரும்பாலான மக்கள், முக்கியமான உழைப்பாளி இனத்தார்கள். நாம் படிக்கும் பேப்பர் அச்சுக்கோப்பவர், உட்காரும் நாற்காலி செய்பவர், ஏறிச் செல்லும் மோட்டாரை இயக்குபவர்—இப்படி சொல்லிப் போனால் நீங்களும் நானும் உட்பட இந்தத் தொழில் கூட்டத்திற்குள் ஐக்கியம். இரண்டாவது பிரிவினர் கற்பனைவாதிகள், கவிஞர்கள், ஓவியர்கள் பாடகர்கள், கலைஞர்கள். இவர்களால் அக்குடும்பத்தாருக்குஎவ்விதப்பயனும்கிடையாது; மக்கள் குலத்திற்குப் பயனுண்டு. மூன்றாவது பிரிவினர் பண்டிதர்கள், அறிவாளிகள், நிபுணர்கள் என்ற குழுவினர். இவர்களால் குடும்பங்களுக்கும் பயன்; மக்கள் குலத்திற்கும் பயன் — இப்படி வகுத்துள்ளார் செஸ்டர்டன் என்ற கட்டுரையாளர்.

நான் மக்கள் குலத்தைப் பிரித்தால் பிரசங்கம் செய்வோர், கேட்போர், இருசாராரையும் இணைப்போர்; பணக்காரர்கள், ஏழைகள், இருபேரையும் இணைக்கும் அரசாங்க ஊழியர்கள்; விற்போர், வாங்குவோர், இருபேரையும் கண்மறைக்கும் தரகர்கள்; பக்தகோடிகள், கடவுள்கள், இருவரையும் இணைக்கும் வருமானவரி அலுவலகங்கள்; ரேஷன் சிப்பந்திகள், பசி இலாகா, இரண்டுக்கும் பாலமிடும் கள்ளச் சந்தைக்காரர்கள்; டிக்கெட் எடுத்தவர்கள், பரிசோதகர்கள், இருவருக்கும் தொல்லை

தரும் டிக்கட்டில்லாத பிரபுக்கள்; உழைப்பவன், உண்பவன், இருவர் நோய்களுக்கு பணங்கறக்கும் வைத்தியர்கள்; வாதி, பிரதிவாதி, இருவரையும் புத்திபுகட்டி அறிவுக்கொள்முதலுக்கு இடம் கொடுத்துப் பணம் பறிமுதல் செய்யும் வக்கீல்கள்; பாதசாரி, மோட்டார்சவாரி, இருவரையும் ஐக்கியப்படுத்தும் ரோட்டு மேஸ்திரிகள்; நானும் நீங்களும், நம்மைச் சேர்ந்து வைக்கும் பத்திரிகைக்காரர்கள் ......இன்னோரன்ன...

* * *

எவ்வளவு நாள் வாழ்ந்தோம் என்பதன்று வாழ்க்கை; எப்படி வாழ்ந்தோம் என்பதே !

* * *

மனிதன் என்றுமே தனக்காக வாழமுடியாது. இன்னொரு ஜீவனோடு ஜீவனுக்காகவேதான் வாழ முடியும். ஆண், பெண்ணுக்காக; பெண், ஆணுக்காக. பெற்றோர் குழந்தைகளுக்காக; குழந்தை, பெற்றோருக்காக — இப்படி வாழ்வு பிறருக்காக என்ற வட்டத்திலே நாம் சுற்றுகிறோம். முன்னாளில் பணம் பணக்காரர்களுக்காக அல்ல; அதைத் தேவையுள்ள மக்களுக்காகச் சேர்க்க வேண்டுமென நீதி நூல்கள் சொல்லி வந்தன. கவிதை நூல்களிலும் இந்த உணர்ச்சியைப் பார்க்கலாம். அரசன் உடம்பு; மக்கள் உயிர்— என்பது தசரதனுக்குக் கம்பன் கொடுக்கும்இலக்கணம். மக்களுக்குத்தான் அரசாங்கம்; அரசாங்கத்திற்காக மக்கள் அல்ல என்று இன்றுள்ள உணர்ச்சியையே "உயிரெல்லாம் உறைவதோர் உடம்பாயினுன்." என்று கம்பன் சொல்லுகிறுன்.

* * *

மக்களுக்குக் கொடுக்கப்படும் அறிவுரைகள் எல்லாம் விரும்பி ஏற்கப்படுவதில்லை, சொல்லுக்கு வரவேற்பு; செயலுக்குக் கல்தா. பயன் விளைவிக்காத சொற்களைச் சொல்வது பயனற்ற காரியம்

* * *

பயன் இருக்கிறதோ இல்லையோ, புத்திமதி சொல்லும் போது சொல்கிறவர்களுக்கு மகிழ்ச்சி; கேட்பவர்களுக்குச் செய்யாதிருக்கும்போது மகிழ்ச்சி. மகிழ்ச்சியை நாம், தேடிக்கண்டு பிடிக்கமுடியாது. வைரங்களையும் தங்கப்பாளங்களையும், மிகவும் கஷ்டப்பட்டுச் கண்டுபிடிக்கிற மாதிரி, மகிழ்ச்சியைக் கண்டுகொள்ளமுடியுமா? எப்போதாவது எதிர்பாராதவிதமாக வானவில் போல அவை எதிர்ப்படும். துன்பங்கள் இப்படியல்ல; அவை அரசாங்க உத்தரவு போன்றவை; எப்போதும் கண்ணில் படும்.

* * *

உலகமாகிய கூட்டுறவுச் சங்கத்தில்,நாம் பங்குதாரர்கள். இந்தச் சங்கத்தின் பெயர் துன்பம். இன்பம் என்னும் சங்கத்தில் அதிகப்படியான நபர்கள்,கூட்டுறவு வைத்துக் கொள்ளுவதில்லை.

* * *

சிரிப்புக்கும் இன்பத்திற்கும் நெருங்கிய தொடர்புஉண்டு. அது சொல்லும் பொருளும் போன்



சிரிப்பையே பேசிக்கொள்வது

றது. உங்களிடம் தங்கள் துன்பங்களை, சிரமங்களை, கஷ்டங்களைச் சொல்லி அழவைக்க ஆயிரம் பேர் இருக்கிறார்கள். இன்பங்களைச் சொல்லிச் சிரிக்க வைக்க ஒருவர் இருக்கிறாரா? சிரிப்பையே ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது என்று வந்துவிட்டால், அந்த உலகம் எவ்வளவு இனிமையாக விருக்கும்! துன்பங்களைத் துடைத்து இன்பங்களை வளர்ப்பதைவிடத் தனிப்பட இன்பங்களையே வளர்ப்பது, பணப்பயிர் பயிரிடுவதைப்போன்றது. ஔவையார் 'தாதா கோடிக்கு ஒருவர்' என்றார். சிரிப்பை மட்டுமே வாழ்வின் துணையாகக் கொண்டு பிறருடன் சிரித்துப்பேசும் பெரியவர்கள் இந்தத் தாதாக்களை விடக் குறைவாக இருக்கிறார்கள்!

* * *

எந்தத்தீமை எந்த வடிவில் வந்தாலும், அதனால் பாதிக்கப்படுபவர்கள் ஏழைகள்; எந்த நன்மை எந்த வடிவில் வந்தாலும் அதனால் லாபம் அடைபவர்கள் பணக்காரர்கள்.

பொருளைச் சிக்கனம் செய்வது சம்பாதிப்பதை விடக் கடினமான செயல். கல்யாணம் செய்வதைவிடமிகவும் கஷ்டமான காரியம் சிக்கனம். இது ஏழைகளுக்குத்தான் பிரச்சாரம் செய்யப்படுகிறது. மாதம் ஆயிரம் ரூபாய் சம்பாதிப்பவன் ரூபாய்நூறு மிச்சம் வைப்பது மிக எளிது. மாதம் பத்து ரூபாய் சம்பாதிப்பவன் ஒரு ரூபாய் மிச்சம் வைப்பது, உடலில் உயிரை வைத்திருப்பது போன்றது. ஆனால் பணத்தை மிச்சம் வைப்பதன் அவசியத்தை நமக்கு உணர்த்துகிறவர்கள் பணத்தின் சுகசௌக்கியத்தை அனுபவித்துக்கொண்டு சொல்லுகிறார்கள். நானும் நீங்களும் அந்தச் சுகங்களைக் கனாக்காணக்கூட முடியாமல் மிச்சம் வைக்க முயற்சி செய்கிறோம்.

* * *

ஒரு துறையில் உழைக்க முடியாதவர்கள் விமர்சகர்களாகிறார்கள்; பிரசாரகர்கள் ஆகிறார்கள்; புத்திமதியைப் போதிப்பவர்களாகிறார்கள்.

* * *

என் அனுபவத்தில் பல போதனாசிரியர்களைக் கண்டிருக்கிறேன். என் குடும்ப நலனைக் கருதும்இன்சூரன்ஸ்ஏஜண்டுகள், என் துணிமணிகளைப் பற்றி அக்கரை கொண்ட தொழிலாளிகள், என் வீட்டு நாற்காலிமீது கருணை கொண்ட உழைப்பாளிகள் இப்படிப்பலர் எனக்காகவே அவர்கள் வாழ்வதாகச் சொல்லுகிறார்கள். அவர்களுக்காவே நான் உயிர் வாழ்கின்றேன் என்பது வெளிப்

படை. பிறருக்காக நாம் வாழ்கிறோம் என்பதை விளம்பரம் செய்ய ஆரம்பித்தால் சந்தேகம் வந்துவிடும். நமக்காக நாம் வாழ்கிறோம் என்பதைச் சொன்னால் சந்தேகத்திற்கு இடமில்லை. நேர்மைக்கும் நீதிக்கும் இது காலமா? இன்பமும் இனிமையும் பொங்கவேண்டுமானால், அதுவே நியாயம்.

* * *

நீதிமன்றங்களில் நீதியும் நியாயமும் வழங்குவதோடு, சற்று அன்பு கனிந்த அனுதாபமும் வழங்க வேண்டும்.

* * *

உலகம் உய்வதற்குத் தேவை அனுதாபம். முதலைக் கண்ணீர் வெளிப்படையான அனுதாபம். ஆளோடு அழுது விம்மி முதுகில் தட்டிக்கொடுப்பது ஆறுதல்; மனம் ஒப்பி உதவி செய்துவிடுவதே உண்மையான அனுதாபம். பாராட்டுதலும் தூற்றுதலும், பிறருக்கு உதவியாக இருக்க முடியாது. ஒருவருக்குள்ள குறைபாடு பிறருக்கு லாபமாக இருக்கலாம். என்னிடமுள்ள பணப்பெருக்கம் எனக்கு அதிகத் தொல்லை தருகிறது. பிறருக்குப் பணமில்லாததால் தொல்லைகள் மிச்சம். பணம் பதவி, அந்தஸ்து, அதிகாரம் இவைகள் இடைக்காலத்தில் வந்து சேர்ந்தவை. மனிதன் மனிதனுக்காக ஆற்றவேண்டிய தொண்டுகளை மறக்காமலிருப்பதே நாடு நலம்பெறும் வழி. நாம் சாதாரண மனிதர்கள். மனிதகுலத்தின் ஆசாபாசம், சுயநலம், குறைபாடு உள்ளவர்கள். பிறரிடமுள்ள வேலையாட்கள், பிரம்மாண்டமான மோட்டார்கள் இவைகளை ஒரு பொருட்டாக மதிக்கிறோம். பட்டும் வைரமும் நம் மனதில் பதிகின்றன. ஆனால் மனிதன் மனிதனுக, ஒருவனுக்கு ஒருவன் துணையாக நிற்பதைக் கண்டால், அதை நாம் ஊன்றி உணர்வதில்லை; பிரமாதப்படுத்துவதுமில்லை. இலட்சாதிபதி, கொடை வள்ளலாகப் பெயர் எடுப்பதற்கு விளம்பரங்கள் நடக்கின்றன. இருநாள் பட்டினியாளன், ஒரு நாள் பட்டினியிடமிருந்து ஒரு வேளை உணவு பெற்றால் அதை யார் போற்றுகிறார்கள்?

* * *

ஏழையின் துயரை அனுதாபத்தோடு உணரக்கூடியவன் ஏழையே; ஏழைமீது அன்பு கொண்ட அறிவாளியால் ஒரு சிறிதே உணர முடியும்.

* * *

வாழ்க்கைக்குத் தேவை உணவு, உடை என்பதோடு அடுத்தபடியாக வருவது எது?



நினைத்தமாத்திரத்தில்... பாக்யசாலி



‘ஆஹா, ஊஹூ’ என்று குதித்தார்’

பொன்னும் பொருளுமா? அல்ல. தூக்கம். தூக்கம் நிம்மதியுடன் வந்தால் அது ஆரோக்கியத்தின் அறிகுறி. சுகவாழ்வின் திறவுகோல். பஞ்சணை மெத்தையில் பங்காவுக்கு அடியே படுத்து மனம் புழுங்குபவனைவிட, முழங்கையைத் தலைக்கு வைத்து நினைத்த மாத்திரத்தில் தூங்கி விடுபவன் பாக்கியசாலி. பங்கு மார்க்கெட்டில் நூல், வெள்ளி, தங்கம் வாங்கிவிடுகிறமாதிரி தூக்கத்தையும் வாங்கி லாபம் அடையமுடியுமா? உணவை, உடையைப் பதுக்கிவைத்து லாபம் அடைகிறவர்கள் நிச்சயமாகத் தூக்கம் வராது கஷ்டப் படுகிறார்கள். தூக்கம், எங்கும் வாங்கக்கூடிய பொருளாக இருந்து விட்டால், இப்போது பணத்தை வைத்துள்ளவர்கள், அத்தனை பேரும் வாங்கித் தீர்த்துவிடுவார்கள். இயற்கை, ஏழைகளுக்கும் அதிகப்பேராசை இல்லாதவர்களுக்கும் தூக்கத்தை வாரி வழங்கி விட்டது. ஏழைகளைக் கண்டு பொறாமைப்படக்கூடிய பொருள்களில் தூக்கமே தலைசிறந்தது.

அமெரிக்காவில், பல சாதனங்கள் இருக்கின்றன. குழந்தை அழுததும், நம் நாட்டுத் தாய்மார்கள், ‘ஆரோ ஆராரோ ஆரிரோ’ பாடுவது போன்று பாடமாட்டார்கள். சில கம்பெனிகள் இருக்கின்றன; அங்கேயிருந்து ஒலிப்பதிவு வைப்பார்கள்; அத்தாலாட்டுக் கேட்டுக் குழந்தை தூங்குமாம்

* * *

அழுத பிள்ளை பால் குடித்தது அந்த நாளிலே; பாட்டுக் கேட்பது இந்தநாளிலே.

* * *

சமீபத்தில் எனக்கு அறிமுகமான வீரதீரப் பேச்சாளர் ஒருவர் தம்முடைய வீட்டுக்கு என்னை அழைத்திருந்தார்; போனேன். அவரது மனைவி அடுப்பங்கரையில் புகை மண்டலத்திற்கு ஊடாக இருந்தார். சற்றுப் பொறுத்துக் காப்பிவந்தது என்பதைச்சொல்லாமல் விடவேண்டியதே. பின்னர் பிரசங்கம் செய்வதற்கு அவர் புறப்பட்டார். அந்த அம்மையார் தாமும் வரலாமா என்றதற்கு, எனது நண்பர் “சாதம் வடித்துக் குழம்பு வை. கருகப்பருப்பு வறுத்துத்துவையலறை; காரமான வெங்காயம் போட்ட கூழ்வற்றல் வறுத்துவை” என்றார். எனக்குச் சாப்பாட்டைச் சொன்னாலே மகிழ்ச்சி; சாப்பிடும்போது ஏற்படும் கஷ்டங்கள் ஒரு புற

மிருக்க, அந்தப் பட்டியலைக் காதாலே கேட்பதில் தனி இன்பம்!

நண்பருடன் பிரசங்கத்திற்குப் போனேன். பேசினார். என்ன பேசினார்? வீராவேசமாக, "இந்த நாட்டில் இருக்கும் ஆண் பெண், ஆண்பெண் தாமா? ஏ, பழந்தமிழ் நாடே! என்னே உன் பெருமை; சம உரிமை இருக்க வேண்டாமா? அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்றவனை என் முன் கொண்டுவந்து நிறுத்துங்கள். நாலு அறையும் ஒரே கன்னத்தில் கொடுக்கிறேன். எவ்வளவு மடமையான சொல். அந்த வார்த்தைகளைக் கொளுத்துவோம்; இடையூறுகளை உடைப்போம்;...போம்.......போம்" என்று கதறினார். 'ஆஹா ஊஹூ' என்று குதித்தார்; கூத்தாடினார். நானே மிரண்டு போனேன். நண்பர் அவ்வளவு ஆணித்தரமாகப்பேசினார். பெண் விடுதலையில் ஆர்வம் காட்டினார். ஆனால் செயல்? அதுதானே அவர் அகராதியில் கிடையாது. நம்முடைய பேச்சாளர்கள் பலரும் தேனொழுகப் பேசுவார்கள். இவர்கள் பெண்ணினத்தை நம்பியே காலங்கழிப்பவர்கள், வயிறு வளர்ப்பவர்கள்; தேச விடுதலை, சமூகவிடுதலை, தொழிலாளர் விடுதலை, அந்த விடுதலை, இந்த விடுதலையென்று கூவிக் கொண்டு பொதுமக்களுக்குப் பிடித்தமான அம்சங்களைப் பேசிப் பேசியே லாபமடைகிறார்கள். இந்தக் கூட்டமே நாட்டில் அதிகம். 'பாஷனை'ப்போல் இதுவும் பெருகி வருகிறது.

* * *

நான் செய்கிறபடி செய்யாதே: நான் சொல்கிறபடி செய்.

* * *

பிறர் இனிக்கப் பேசி, தான் மட்டும் பழமையைக் கைக்கொள்ளும் புத்திசாலிகளை நீங்கள் என்ன செய்வீர்கள்? நான் அவர்களை நச்சுப்பாம்பாக நினைக்கிறேன். எனக்குக் கொல்லக் கூடிய சக்தி இல்லை என்பது வெளிப்படை.

நல்ல வைத்தியம்!

எஸ். ஆறுமுகம்

மாரம்பட், வேலைக்காரன் நீட்டிய கடிதத்தைப் பிரித்துப் படித்ததும் புன்னகை பூத்தார்.

டெனிஸ், அவருடன் இருபது ஆண்டுகள் வேலைக்காரனாக இருந்திருக்கிறான். அவன் மிகவும் வேடிக்கையானவன்; குட்டையான பருத்த உருவம். அப்பகுதியில் அவன் ஒரு லட்சிய வேலையாள் என்பது பிரசித்தம்.

"ஐயா, நீங்கள் மிகவும் மகிழ்வுடன் காணப்படுகிறீர்களே... ......ஏதாவது நல்ல செய்தி வந்திருக்கிறதா?"

மாரம்பட் அப்படிப் பணக்காரரல்ல; ஓய்வு பெற்ற கிராம மருந்து வியாபாரி. மணமாகாதவர். அண்டைக் கிராம மக்களிடம் விற்கும் மருந்துகளின் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு அவர் வாழ்ந்துவந்தார்.

"ஆம்; நான் அவனைக் கோர்ட்டில் கூண்டேறச் செய்து விடுவேன் என்ற அச்சத்தில் இப்போதுதான் அந்த மாலோ என் வழிக்கு வந்திருக்கிறான். அநேகமாக நாளைக்கு அவன் பணம் தந்துவிடுவான். ஐயாயிரம் பிராங்குகள் என்றால் என்னைப்போன்றவர்கட்கு வரவேற்கக்கூடியதேயல்லவா?"

மாரம்பட் கைகளைப் பிசைந்துகொண்டார். அவர் ஒரு வகை விசித்திரப் பிறவி. களிப்பைவிடச் சஞ்சலமிக்கவர்; உழைப்பிற்கு உதவாதவர்; தொழிலில் நிலையற்றவர். நகரின் முக்கிய பகுதிகளில் தன் தோழர்கள் இறந்த சந்தர்ப்பத்தைக் கவனத்துடன் பயன்படுத்திக்கொண்டிருப்பாரானால், மாரம்பட் கட்டாயம் நிரம்பப் பொருள் சேமித்திருக்கலாம். அவர்களது வாடிக்கைக்காரர்களையும் பிடித்துக்கொண்டிருக்கலாம். ஆனால் அவர் முழுச் சோம்பேறி. அவருடைய இந்தக் குணங்கள் அவரது வாழ்க்கைப் பாதையின் முன்னேற்றத்தை அணைகட்டித் தடுத்தன. "இதுதான் கடைசி முறை. இனியும் வீணே காத்திருந்து எந்த வாய்ப்பையும் இழக்கமாட்டேன். நல்லதொரு சந்தர்ப்பம் எனக்குக் கிட்டும் என உள்ளுணர்வு கூறுகிறது" என்று சொல்லித் திருப்தி அடைவது அவர் வழக்கம்.

ஆனால் டெனிஸ் எப்போதும் தன் எசமானனைப் புதுப் புதுத் தொழில்களில் ஈடுபடுத்தி முன்னேறத் தூண்டியவண்ணமிருப்பான். மிகவும் சுறுசுறுப்பான பண்புள்ள அவன் அடிக்கடி "இப்பொழுது நான்மட்டும் ஒரு

நூறு பிராங்குகள் வைத்திருந்தால், ஆகா—இந்நேரம் தொழிலில் எத்தகைய அதிருஷ்டக்காரனாக ஆகிவிட்டிருப்பேன்......" என்று கூறுவான்.

மாரம்பட் பதில் ஒன்றும் சொல்லாமல் மெல்லச் சிரித்துக் கொண்டு, கனவுகளில் லயித்தவாறு கைகளைப் பின்னிச் சேர்த்தவண்ணம் தோட்டப் பக்கம் காற்ருடச் சென்றுவிடுவார்.

அந்நாள் முழுதும் டெனிஸ் வீட்டைப்பற்றியும், நாட்டைச் சூழ நின்ற இயற்கையைப்பற்றியும் பாடித் தீர்ப்பான்; வேலைகளில் தனித்த ஈடுபாட்டைக் காண்பிப்பான்; வீட்டு ஜன்னல்களை—கண்ணாடிக் கதவுகளை அவசரத்துடன் அழகாகத் துடைப்பான்.

மாரம்பட், அவன் உற்சாகத்தைக் கண்டு அதிசயித்து, நகை இழைய "டெனிஸ், இப்படி ஒரேயடியாக நீ வேலையில் முனைந்து போனால் அப்புறம் உனக்கு நாளைக்கு வேலை செய்ய எதுவுமிராதே......" என்பார்.

* * *

அடுத்த நாள் காலை ஒன்பது மணி அளவில் டெனிஸிடம் எசமானருக்கென நான்கு கடிதங்களைக் கொடுத்துச் சென்றான் தபால்காரன். அவற்றில் ஒன்று கனமாயிருந்தது. மாரம்பட் கடிதங்களுடன் போய்த் தன் அறையைத் தாழிட்டுக்கொண்டார். மத்தியானத்திற்குப் பின் அவர் வேலையாள் வசம் நான்கு கடிதங்களைத் தபாலில் சேர்க்கக் கொடுத்து அனுப்பினார். அவற்றில் ஒன்று மாலோவுக்கு. ஆம்; சந்தேகமின்றி அதில் பணம் பெற்றதற்கு ரசீதுதான் இருக்க வேண்டும்.

டெனிஸ் முதலாளியிடம் எதுவும் கேட்கவில்லை; முன்னாள் அவன் எத்தனை குதூகலத்துடன் விளங்கினனே, அதற்கு மாருக அன்று மனமிடிந்து சஞ்சலம் பிரதிபலிக்கத் தோற்றமளித்தான்.

இரவு வழக்கமான நேரத்துக்கு மாரம்பட் உறங்கிப் போனார்.

திடீரென்று விபரீதமானதொரு ஓசை கேட்கவே மாரம்பட் விழித்தெழுந்தார். படுக்கையில் நடுக்கத்துடன் அமர்ந்தபடி கணப்போது ஊன்றிக் கவனிக்கலானார். 'பட்'டென்று அறைக் கதவுகள் திறக்கப்பட்டன. அங்கு டெனிஸ் தோன்றினன். அவன் கண்கள் அகல விரிந்து, பயங்கரமாக இருந்தன. உதடுகளும் கன்னமும் ஏதோ பயங்கர விபத்தில் சிக்கிக்கொண்டவனைப் போல மாறுபட்டும், பேயைப் போல வெளிறியும் இருந்தன. அப்பொழுது டெனிஸ் ஒரு கையில் மெழுகுவர்த்தியுடனும், மறு கையில் ஒரு கத்தியுடனும் காணப்பட்டான்.

அடுத்த கணம் வேலைக்காரன் மெழுகுவர்த்தியை அணைத்துவிட்டுத் தன் படுக்கைக்குத் தாவுவதைக் கண்டதும், மாரம்பட் ஒரு வேளை அவன் தூக்கத்

தில் நடக்க எத்தனித்து, பின் நினைவு மீண்டதும் இப்படிச் செய்கிறுனே என்றும் எண்ண மிட்டார். அவர் கைகளை நீட்டி டெனிஸ் தன்மீது பாயவந்த தைத் தடுத்துவிட்டார். இல்லை யெனில் முதுகில் அந்தக் குத்து பலமாக விழுந்திருக்கும். அவ னுடைய திடீர்ப் பைத்தியத்தின் காரணமாகத் தன்பேரில் குறி வைத்திருக்கும் அவன் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண் டார் மாரம்பட்.

அவர் ஒரு முறை தோளில் கத்தியால் குத்தப்பட்டார்; இரண்டாம் தரம் நெற்றியில்; மூன்றும் முறை வயிற்றில்! இரவின் தனிமையில் அவர் அவனுடன் மிகவும் போராடிவிட் டார். மூச்சு நின்று நின்று வெளிவந்தது.

"டெனிஸ், டெனிஸ்! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட் டதா, டெனிஸ்?"

ஆனல் டெனிஸ் மூச்சுத் திணறும் நிலையிலுங்கூட எசமானரைப் பல முறை உதைத் தான்; குத்தினன். திரும்பவும் மாரம்பட்டுக்குக் காலில் இரண்டு இடங்களில் காயம் பட்டது. சடுதியில் அவர் மனதில் ஒரு யுக்தி மின்னலிட்டது.

"நிறுத்து டெனிஸ்; எனக்குப் பணம் எதுவுமே வரவில்லை"

அவன் கணத்தில் நின்றுவிட் டான். அவன் இருளில் நெடு மூச்செறிவதை எசமானரால் நன்கு கேட்க முடிந்தது.

"நான் பணம் எதுவும் பெற வில்லை. மாலோ இப்போதும் தன் வார்த்தைகளைத் தவறவிட்டுவிட் டான். மறுபடியும் அவன்மீது வழக்குப் போடப்போகிறேன். உன்னிடம் தபாலில் சேர்க்கச் சொல்லிக்கொடுத்த கடிதங்களில் அதைத்தான் எழுதியிருந்தேன், டெனிஸ்......"

திணறிக்கொண்டு படுக்கையி னின்றும் தீப்பெட்டியை எடுத்து வர்த்தியைப் பற்றவைத் தார்.

அவர் ரத்தத்தில் பூசப்பட் டிருந்தார். சுவர்களிலும் ரத்தக் கறை அப்பி யிருந்தது. போர்வை, திரை—அனைத்திலும் ரத்தம்! அடி முதல் முடிவரை ரத்தம் நனைந்திருந்த டெனிஸ் நடுக்கத்துடன் அறையில் நின் ருன். இக்காட்சியைக் கண்ட மாரம்பட் மயங்கி விழுந்தார்.

அவருக்குத் தன் நினைவு வந்தபோது விடிந்திருந்தது. இரவில் நடந்த சம்பவங்களை நினைவுகூர்ந்த அவருக்கு ஒரு வகைப் பயம் பற்றிக்கொண் டது. நல்ல வேளை; அவர் இறந்துபடவில்லை; பிழைத்து விடலாம். என்ருலும் மிகவும் வலுவில்லை. சோர்வுற்றுமிருந் தது உடம்பு. அங்கங்கே வேத னையும் அயர்வும் குடைந்து கொண்டிருந்தன. மேனியெங் கும் குளிர்ந்திட்ட மாதிரி உணர்வு பெற்ருர். இத்தகைய குளிர்ந்த தன்மை, ரத்தத்தில் நனைக்கப்பட்டதால் ஏற்பட் டிருக்குமோ என்றும் சிந்தித் தார் மாரம்பட். ரத்தக் குழாய்

களில் உறைந்திருக்கும் குருதி அப்படியே படுக்கையில் வழிந்தோடிவிட்டதோ என்றுகூடத் திகிலடைந்தார் அவர். தன்னையும் மீறித் திறந்துவிடலாகாதே யென விழிகளை இறுக மூடிக் கொண்டார்.

டெனிஸுக்கு என்ன நேர்ந்து விட்டது? 'சட்' டென்று அவன் எங்கோ ஓடி விட்டான்......!

மாரம்பட் இன்னது செய்வ தென்று புரியாமல் விழித்தார். எழுந்திருப்பதா? உதவிக்கு அழைப்பதா? படுக்கையை விட்டுத் துளி நகர்ந்தாலும் ரத்தம் பீறிட்டு வழியும். பிறகு ரத்த நஷ்டத்தினால் அவர் ஆவி பிரிய வேண்டியதுதான்.

அறைக் கதவு திறக்கும் சப்தம் கேட்டது. அரைக்கணம் அவருக்கு உள்ளத் துடிப்பே நின்றுவிட்டது.

"டெனிஸ் என்னைக் கொன்று போடத் தான் வந்து விட்டானா?..."

அவர் மூச்சை முழு பலத்தையும் திரட்டி அடக்கிக்கொண்டார். ஏனென்றால் அந்தக் கொலைகாரன் தான் முன்னமேயே மடிந்துவிட்டதாக எண்ணித் திரும்பிவிடுவான்......!

போர்வையை விலக்கி, பின் வயிற்றை யாரோ சோதிப்பதை உணர்ந்தார் முதலாளி. உணர்வின் உறைவினால் உபாதை வளர்ந்தது. யாரோ சுத்தமான தண்ணீரால் உடல் பூராவையும் மெல்லக் கழுவினார்கள். அப்படியென்றால்—குற்றம் புரிந்தவன் கண்டு பிடிக்கப்பட்டிருக்க வேண்டும். அதனால்தான் அவர்

அக்கரையுடன் கவனிக்கப்படுகிறார். களிப்பு வெறி அவரைப் பற்றியது. நினைவு பெற்ற அவர் ஒரு கண்ணைமட்டும் திறந்தார்;



ஒன்றே ஒன்று—அதுவும் உல கின்கண் கூரிய எச்சரிக்கை கொண்டபடி!

அங்கு நிற்பது டெனிஸ் என் றறிந்த மாரம்பட் அவசரம் அவசரமாகக் கண்களை மூடிக் கொண்டார்.

'டெனிஸ்! இப்போது என்ன வெல்லாம் உபசரணைகள் செய் தான்? வேறு இன்னல் விளைக் கப் புதிய திட்டத்திற்கு ஏதாகி லும் அடிப்போடுகின்றானா? என் றென்றுமே கண்டு பிடிக்கப் படாத வகையில் தன்னைத் தோட்டத்துப் புழக்கடையில் சாம்பலாக்கிவிடுவான்; அல்லது ஒயின் சீசாக்களைப் பதுக்கும் பாதாள அறையிலே ஆழப் புதைத்துவிடுவான்......!'

இத்தகைய பயங்கர நினைவு களினூடே மாரம்பட் நடுங்கிப் போனார்.

"இன்றுடன் நான் இறந்து விடவேண்டியதுதானா?'

அவருள்ளே மேற்கண்ட வினா சுற்றிச் சுழன்றது.

தன்மீது விழவிருக்கும் கடை சிக் கத்திவீச்சைப் பார்க்கா திருக்க மாரம்பட் இமைகளைப் பொருத்திக்கொண்டார். அவர் நினைத்த ரீதியில் ஒன்றும் நேர வில்லை. டெனிஸ் அவரைத் தூக்கி மருந்துத் துணியால் கட் டுப்போட்டான். பிறகு கால் புண்ணுக்கும் மருந்திட்டான், ஏற்கனவே எசமான் கற்பித்தது போல. எசமானரைக் கொல்ல எத்தனித்த டெனிஸ், தற்சம யம் அவரைக் காப்பாற்றுவதில் ஈடுபட்டிருந்தான்......!

மாரம்பட் கண் மலர்களைப் பிரித்தார். படுக்கையில், அறை யில் எங்கும் துளி ரத்தமும் காணப்படவில்லை. புண்பட்ட அவர் தூய வெண்ணிறப் போர் வைகளிடையே படுத்துக் கிடந் தார்.

அவரும் அவனும்—எசமான ரும் பணியாளும்—மாறி மாறிப் பார்த்துக்கொண்டார்கள்.

"நீ பெரிய தவறு செய்து விட்டாய்."

"அதற்கு நான் பிராயச்சித் தம் பெற முயல்கிறேன், ஐயா. நீங்கள் என்னைக் காட்டிக் கொடுக்காவிடில், முன்போல உண்மையுடன் உங்களுக்கு உழைப்பேன்......"

"நிச்சயம் உன்னைக் காட்டிக் கொடுக்கமாட்டேன். என்னை நம்பு."

* * *

டெனிஸ், தன் எசமானரைப் பழைய நிலைக்குக் கொண்டுவந் தான். பல இரவு பகல்களை அவன் தூக்கமின்றிக் கழித் தான். நோயாளியை விட்டு அவன் வினாடிகூட விலகவில்லை; நாடி பார்த்து உரிய மருந்து களைத் தயாரித்துக் கொடுத் தான். ஒரு நர்சைப்போன்ற திறமையுடன், ஒரு புதல்வ னின் பக்தியுடன் டெனிஸ் அவ ரைக் கண்காணித்துவந்தான்.

"ஐயா, இப்போது எப்படியிருக்கிறது?"

ஒவ்வொரு கணமும் இப்படி அவன் கேட்டான்.

"சற்று தேவலாம்; உனக்கு மிகவும் நன்றி."

மாரம்பட் தணிந்த குரலில் பதிலிறுத்தார்.

நோயாளி இரவில் உறங்கிப் போனதும் டெனிஸ் நாற்காலியில் உட்கார்ந்து அழுது கொண்டும், கண்ணீரைத் துடைத்துக்கொண்டும் விழித்திருப்பான்.

'நான் உடல் தேறியதும் முதலில் இந்த அயோக்கியப் பயலைத் தொலைத்து விடவேண்டும்' என்று மனதிற்குள் நினைத்திருந்த மாரம்பட் நாளடைவில் தன் முடிவை மாற்றிக்கொள்ளும் படி டெனிஸ் நடந்துகொண்டான். அவனைத் தவிர வேறு யாராயிருந்தாலும் இத்துணை சிரத்தையுடன் எசமானரைக் கவனிக்க முடியுமா? அவனால் பழையபடி ஏதாவது புது விபத்து ஏற்படுவதைத் தடுக்க, அவர் வக்கீலிடம் ஏற்பாடு செய்திருப்பதாயும் டெனிசுக்கு முன்னெச்சரிக்கை விடுத்திருந்தார்.

டெனிஸ் தன் தொண்டினை வியக்கத்தக்க வண்ணம் தொடர்ந்தான். மாரம்பட் பூரணகுணம் பெற்றார்.

ஒரு நாள் காலை ஆகாரம் முடிந்ததும், சமையல் அறையில் பயங்கரக் கூச்சல் கிளம்புவதைக் கேட்டு ஓடினார். அங்கு டெனிஸ் இரண்டு தானைக்காரர்கட்கு மத்தியில் தத்தளித்துக் கொண்டிருந்தான். இன்ஸ்பெக்டர் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார்.

தன் முதலாளியைக் கண்டதும், ஏவலாளன் டெனிஸ் கண்ணீர் வழிய அலறினான்.

"ஐயா, நீங்கள் என்னைக் காட்டிக் கொடுத்து விட்டீர்கள்... உங்கள் வாக்கினின்றும் புரண்டு விட்டீர்கள்...இது அழகில்லை... ஐயா"

அவன் பேச்சைக் கேட்ட மாரம்பட் திகைத்தார். அவன் தன்மீது சுமத்தும் சந்தேகப் பழிக்கு அவர் வேதனைப்பட்டார்.

"ஆண்டவன்முன் ஆணையிட்டுச் சொல்லுகிறேன், நான் உன்னைக் காட்டிக் கொடுக்கவில்லை யென்று. நீ என்னைக் கொல்ல முயன்றதை எங்ஙனம் இந்தப் போலீஸ்காரர்கள் தெரிந்து கொண்டனர் என்பதே எனக்குப் புரியவில்லை......"

அதற்குள் இன்ஸ்பெக்டர் இடைமறித்து "மாரம்பட், அவன் உங்களைக் கொல்ல எத்தனித்தாகச் சொல்கிறீர்களே ...என்ன சேதி?......" என்று வினவினார்.

அதிர்ச்சியுற்ற மாரம்பட், "ஆம்......ஆனால் நான் அவனைக் காட்டிக் கொடுக்கவில்லை. என் வாயால் ஒரு வார்த்தை கூடக் கூறக் கிடையாது..... நான் உறுதி சொல்கிறேன். என்றும் அவன் ஓர் அதிசயமான பணியாளனாக இருந்திருக்கின்றான்......" என்று தட்டுத் தடுமாறிப் பதில் கூறினார்.

"உங்கள் வாக்குமூலத்தை நான் குறித்திருக்கிறேன். எங்களுக்கு அறிவிப்பின்றி நிகழ்ந்திருக்கும் இப்புதிய சம்பவத்திற்குச் சட்டம் தகுந்த நடவடிக்கை எடுக்கும். தற்சமயம் டு ஹாமெல் வீட்டிலிருந்து இரண்டு வாத்துக்களைக் களவாடிய குற்றத்துக்கு உங்கள் வேலைக்காரனை நான் கைது செய்கிறேன். என்னை மன்னிக்கவும், மாரம்பட்".

கண்டிப்புடன் கூறிய போலீஸ் இன்ஸ்பெக்டர், "ஹும், புறப்படுங்கள்" என்று உத்தரவிட்டார்.

தாணுக்காரர்கள் இருவரும் டெனிசை இழுத்துச் சென்றார்கள்.

டெனிஸின் பைத்தியத்தை நிரூபிக்க, வக்கீல் தன் வாதத்துக்கு ஆதாரங்களை ஒன்றன் பின்னொன்றாக அடுக்கிக்கொண்டு போனார்.

சித்தப்பிரமை காரணமாக மாரம்பட் உடல்மீது குத்திய எட்டு கத்திக் குத்துக்களைப் போலவே, அவன் புத்தி புரண்ட நிலையில் வாத்துகளையும் களவாடியிருக்கிறான் என்பதைத் தெளிவாக எடுத்துரைத்தார் வக்கீல். மேலும், நல்ல சிகிச்சை பெறவேண்டிய அவனுடைய நிலையற்ற மனத் தெளிவின்மையின் விபரத்தையும் அவர் விளக்கினார். தன் எசமானரின் மீது டெனிஸ் கொண்ட உள்ளன்பை, புண்பட்ட அவரைப் பண்படுத்த அவன் எடுத்துக் கொண்ட சங்கடங்களைப் படிப்படியாக விவரித்தார் வழக்கறிஞர்.

கடந்த நினைவுகளில் மனம் நெகிழ்ந்த மாரம்பட்டின் இமைகளில் கண்ணீர் நிறைந்தது.

அவரையே கவனித்துக் கொண்டிருந்த வக்கீல் அவரை நோக்கியவாறு கைகளை நீட்டி "நீதிக் குழுவினரே, மாரம்பட்டைப் பாருங்கள். அவர் கண்ணீரைப் பாருங்கள். என் கட்சிக்காரனுக்குச் சாதகமாக, இதைவிட அதிகமாக நான் என்ன சொல்லவிருக்கிறது? அவன் எசமானரின் விழி வெள்ளத்துக்கு ஈடாக என்ன பிரசங்கம்,

என்ன தர்க்கம், என்ன காரணம் என்னால் கூறக்கூடும்? என்னை விட—சட்டத்தைக் காட்டிலும் பலமாக அவை பேசுகின்றனவே ...ஒரு மணி நேரப் பைத்தியத்துக்காக அவை மன்னிப்புக் கோரிக் கதறுகின்றனவே...... அவை நீதிக்கென வாதாடுகின்றன! கருணைக்காகக் கெஞ்சுகின்றன! வெற்றிக்கு ஆசி கூறுகின்றன!"

வக்கீல் பேச்சை முடித்து இடத்தில் அமர்ந்தார்.

தன் பணியாளைப்பற்றி நல்லதொரு குணச் சித்திரத்தைத் தந்த எசமானர் மாரம்பட்டை நோக்கி நீதிபதி, "ஐயா, டெனிஸ் புத்திசுவாதீனமிழந்தவன் என்றறிந்தும்கூட இவனை உங்கள் வீட்டில் ஏன் வேலைக்கு அமர்த்திக்கொண்டீர்கள் என்று புரியவில்லையே... இன்னும் அவனால் வீண்தொல்லையே அல்லவா?" என்று கேட்டார்.

மாரம்பட் கண்களை துடைத்துவிட்டு, "ஆம். ஐயா; இந்நாளில் நல்ல வேலையாட்களைக் கண்டுபிடிப்பதென்றால் நிரம்பவும் சிரமமான காரியமாக இருக்கிறது. மேலும், இவனைவிடத் தேர்ந்தவனை என்னால் கண்டிருக்கவும் முடியாது..." என்றார்.

டெனிஸ் விடுதலை பெற்றான்; உடனே எஜமானரின் செலவில் அவன் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டான்!

[மூலம்: மாப்பஸான்]